என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்


லண்டனில்
தரமான
பொருள்கள்
நீரு

May 2017

FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

subara

THE SMART CHOICE

- Accident Protection
- Block Management
- Building Maintenance
- Critical Illness Cover
- Home Insurance
- Income Protection
- Landlord's Cover
- Life Insurance
- Recruitment
- Security Systems
- Utility Services

Ask our staff for more information

020 3823 1061
info@subara.co.uk
www.subara.co.uk

Subara Business Centre
4 Weald Lane
Harrow HA3 5ES

Niru #1 ®

SINCE 1989

COCONUT MERCHANT

Niru NATURALS ®

AQUA COCO

SURYAA

RUS-C

நிரு தரம் நிரந்தரம்






# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2048
வைகாசி
மலர் : 16
இதழ் : 166
மே - 2017



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


UNLEASH
THE POWER OF GOLD
THARANI
JEWELLERY & PAWNBROKERS
UK'S CHEAPEST GOLD LOANS
STARTING FROM 2.95% PER MONTH
GOLD
LOANS
THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest
£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions
The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.
If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time, we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings. The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

# SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

5 Chapel Road, West Ealing, London W13 9AE. Tel: 0208 810 0835 Fax: 0208 840 0485,
Email: info@ammanealing.org, web: www.ammanealing.org

## இரதோற்சவ அருட்காட்சி (தேர்)-2017


## CHARIOT FESTIVAL - 2017

**கொடியேற்றம்**

21-07-2017 வெள்ளி
காலை: 09:30 மணி

**இரதோற்சவ அருட்காட்சி**
(தேர்)

13-08-2017 ஞாயிறு
காலை: 10:00 மணி







# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்


5 Chapel Road, West Ealing, London W13 9AE

தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல் இல: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org


## மகோற்சவ விஞ்ஞாபனம் 2017

அம்பிகை அடியார்களே,

சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே. - அபிராமி அந்தாதி

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான விளம்பி வருடம் ஆடி மாதம் 5ம் நாள் 20-07-2017 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, ஆடி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை (21-07-2017) காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், 13-08-2017 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 14-08-2017 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 16-08-2017 இரவு வைரவர் மடையுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு, தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### 21-07-2017 முதல் 16-08-2017 வரை பூசை நேரம்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08:00 | சங்கல்பம் | மாலை | 05:00 | சாயரட்சைப் பூசை |
| காலை | 08:15 | அபிஷேகம் | மாலை | 05:30 | ஸ்தம்ப பூசை |
| காலை | 10:30 | ஸ்தம்ப பூசை | மாலை | 06:15 | கலாசார நிகழ்வு |
| காலை | 11:15 | வசந்தமண்டப பூசை | இரவு | 07:00 | வசந்தமண்டபப் பூசை |
| பகல் | 12:30 | மகா பிரசாதம் | இரவு | 10:30 | அர்த்தசாம பூசை |



### மகோற்சவ நிகழ்வுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21/07/2017 | வெள்ளி | கொடியேற்ற அருட்காட்சி காலை 9.30 மணி | 04/08/2017 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 22/07/2017 | சனி | இராஜ இராஜேஸ்வரி அருட்காட்சி | 05/08/2017 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 23/07/2017 | ஞாயிறு | கனகதாரா இலட்சுமி அருட்காட்சி | 06/08/2017 | ஞாயிறு | பக்தானுக்கிரக அருட்காட்சி |
| 24/07/2017 | திங்கள் | நாகபூசணி அம்பாள் அருட்காட்சி | 07/08/2017 | திங்கள் | சந்தான பாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கரதப் பவனி) |
| 25/07/2017 | செவ்வாய் | மீனாட்சி அம்பாள் அருட்காட்சி | | | |
| 26/07/2017 | புதன் | சரஸ்வதி வித்யா அருட்காட்சி | 08/08/2017 | செவ்வாய் | ஜோதி மங்கள அருட்காட்சி |
| 27/07/2017 | வியாழன் | அர்த்தநாதீஸ்வர அருட்காட்சி | 09/08/2017 | புதன் | ஓம்காரரூப தர்சன அருட்காட்சி |
| 28/07/2017 | வெள்ளி | கைலாச தரிசன அருட்காட்சி | 10/08/2017 | வியாழன் | மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி |
| 29/07/2017 | சனி | அன்னைபூர்ணாம்பிகை அருட்காட்சி | 11/08/2017 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 30/07/2017 | ஞாயிறு | அபிராமி தரிசன அருட்காட்சி | 12/08/2017 | சனி | சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 31/07/2017 | திங்கள் | சௌபாக்கியா அம்பிகை அருட்காட்சி | 13/08/2017 | ஞாயிறு | இரதோற்சவ அருட்காட்சி (தேர்)காலை10.00மணி |
| 01/08/2017 | செவ்வாய் | காமாட்சி அம்பாள் அருட்காட்சி | 14/08/2017 | திங்கள் | தீர்த்த உற்சவம், அருட்காட்சி |
| 02/08/2017 | புதன் | அனந்தசயன அருட்காட்சி | 15/08/2017 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல் |
| 03/08/2017 | வியாழன் | புஸ்பக விமான அருட்காட்சி | 16/08/2017 | புதன் | வைரவர் மடை |

**பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக. அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.**

அன்னையின் சேவையில்

**விழா உபயகாரர்களுடன்,**

**ஆலய நிர்வாக சபை, அறங்காவலர் சபை**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

5 Chapel Road, West Ealing, London W13 9AE
Telephone No.: 0208 810 0835 Fax: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org

## MAHOTSAVAM (FESTIVAL) - 2017

Dear Devotees,

London Shri Kanagathurkkai Amman Temple annual Mahostsava festival will be celebrated for 27 days. Festival starts with Gnanapathy Hommam on 20/07/2017 evening and Flag hosting on 21/07/2017 at 9.30am. The Chariot festival is on 13/08/2017and festival ends with Vairavar madai on 16/08/2017.



### FROM 21-07-2017 TO 16-08-2017 POOJA TIMES AS FOLLOWS:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Morning** | **08:00** | **Sankalpam** | **Evening** | **05:00** | **Sayaratsai Pooja** |
| **Morning** | **08:15** | **Abisekam** | **Evening** | **05:30** | **Sthampa Pooja** |
| **Morning** | **10:30** | **Sthampa Pooja** | **Evening** | **06:15** | **Cultural Programme** |
| **Morning** | **11:15** | **Vasantha Mandapa Pooja** | **Night** | **07:00** | **Vasantha Mandapa Pooja** |
| **Afternoon** | **12:30** | **Maha Pirasatham** | **Night** | **10:30** | **Arthasamapooja** |



### MAHOTSAVA PROGRAMME

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21/07/2017 | Friday | **Flag Hoisting 9.30am** | 04/08/2017 | Friday | Ketharagowri Ampaal Appearance |
| 22/07/2017 | Saturday | Raja Rajeswari Appearance | 05/08/2017 | Saturday | Vasanthotsava Appearance |
| 23/07/2017 | Sunday | Kanagadhara Lakshmi Appearance | 06/08/2017 | Sunday | Pakthankraga Appearance |
| 24/07/2017 | Monday | Nagapooshani Appearance | 07/08/2017 | Monday | Santhanapakya Lakshmi Appearance<br>Procession of Golden Chariot |
| 25/07/2017 | Tuesday | Meenadhi Appearance | 08/08/2017 | Tuesday | Jothi Mangala Appearance |
| 26/07/2017 | Wednesday | Saraswathy Vidhya Appearance | 09/08/2017 | Wednesday | Ongara Ruba Dharsana Appearance |
| 27/07/2017 | Thursday | Arthanatheeswar Appearance | 10/08/2017 | Thursday | Maha Dhurga Dharsana Appearance |
| 28/07/2017 | Friday | Kailaya Dharisana Appearance | 11/08/2017 | Friday | Hunting Festival Appearance |
| 29/07/2017 | Saturday | Annapoornampikai Appearance | 12/08/2017 | Saturday | Sakopura Dharsana Appearance |
| 30/07/2017 | Sunday | Abirami Dharisana Appearance | 13/08/2017 | Sunday | **Chariot Festival 10.00am** |
| 31/07/2017 | Monday | Shaupakiyambika Appearance | 14/08/2017 | Monday | Theerththa Vaari Appearance |
| 01/08/2017 | Tuesday | Kamadshi Appearance | 15/08/2017 | Tuesday | Poonkavam Festival Sangabisekam<br>– Sakasdhira (1008) |
| 02/08/2017 | Wednesday | Ananthasayana Appearance | 16/08/2016 | Wednesday | Vairavar Madai |
| 03/08/2017 | Thursday | Pushpaka Vimana Appearance | | | |

Devotees are expected to strictly adhere to Saiva principles during the festival season and abide by Temple rules.
Flowers, milk and coconut water offerings need to be made before the Abisekam.

**All are welcome.**

Festival Sponsors, Executive Committee & Trustees.

---

அம்பிகை அடியார்களே, தங்களின் பேருதவியினால் தாயகத்தில் 15 இல்லங்களில் 500 வரையான பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றார்கள். கடந்த ஆண்டில் "காக்கும் கரங்கள்" திட்டத்திற்காக **£89,425.00** பவுண்களும் ஏனைய பணிகளுக்காக **£136,969.00** அனுப்பப்பட்டுள்ளது. ஆலய தொடக்க காலத்தில் இருந்து தாயகப் பணிக்கு **£2,299,361.00** அனுப்பப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!
அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!
அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்.!

தேர்த்திருவிழா அன்று அர்ச்சனைத் தட்டுக்கள் மூலம் கிடைக்கும் நிதியாவும் வழமைபோன்று தாயக கல்வி உள்ளிட்ட அவசர பணிக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

**The money that is collected from the "Archanai Thatu" on Chariot festival day will be donated to Education project and welfare of our people in Srilanka**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

உ

சிவமயம்



# உயர்வாசற்குன்று முருகன் கோயில்

## BRITTANIA HINDU (SAIVA) TEMPLE TRUST

Registered Charity No: 269067
200A Archway Road, London N6 5BA | Tel:0208 348 9835 |Fax: 0208 482 6508
Email: Secretary@highgatehillmurugan.com |Web: www.highgatehillmurugan.org

### மூன்றாவது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தின் எட்டாவது மகோற்சவ விழா

# பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் - 2017

முருகப்பெருமான் அடியார்களே!

இலண்டன் மாநகரில் மூத்த கோயிலாக அமைந்து விளங்கும் உயர்வாசற்குன்றினிலே கோயில் கொண்டருள்புரியும் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானின் கருணையினால் மேற்படி ஆலயத்தின் மகோற்சவ விழா நிகழும் ஏவிளம்பி ஆண்டு ஆனி மாதம் 5ம் நாள் (19.06.2017) திங்கட்கிழமை காலை ரேவதி நட்சத்திரமும் தசமி திதியும் சித்தயோகமும் கூடிய நன்னாளிலே கொடியேற்ற வைபவத்துடன் விழா தொடங்கி 14ம் நாள் (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலையிலே தேர்த்திருவிழாவும், 15ம் நாள் (03.07.2017) திங்கட்கிழமை காலை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெற்று செவ்வாய்க்கிழமை (04.07.2017) திருக்கல்யாண உற்சவத்துடன் விழா நிறைவுறத் திருவருள் கூடியுள்ளது.

## 20.06.2017 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 01.07.2017 சனிக்கிழமை வரை

காலை 08.15 மணி : சங்கல்பம்
காலை 08.30 மணி : அபிஷேகம்
காலை 09.45 மணி : பூஜை
காலை 10.30 மணி : கொடித்தம்ப பூஜை
காலை 11.15 மணி : வசந்தமண்டப பூஜை தொடர்ந்து திரு வீதியுலா
பகல் 12.30 மணி : மகா பிரசாதம்

மாலை 05.45 மணி : சாயரட்சைப் பூஜை
மாலை 06.45 மணி : கொடித்தம்ப பூஜை
மாலை 07.15 மணி : வசந்தமண்டப பூஜை தொடர்ந்து வீதியுலா
இரவு 09.30 மணி : மகாபிரசாதம்

## மகோற்சவ நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 18.06.2017 | ஞாயிறு | காலை 09.30 மணி | - கணபதி ஹோமம் மாலை பூர்வாங்கக் கிரிகைகள் |
| 19.06.2017 | திங்கள் | காலை 11.30 மணி | - கொடியேற்ற வைபவம் மாலை திருவிழா |
| 26.06.2017 | திங்கள் | இரவு 07.45 மணி | - கைலாய வாகனம் புறப்பாடு |
| 27.06.2017 | செவ்வாய் | மாலை 06.00 மணி | - மாம்பழத்திருவிழா |
| 28.06.2017 | புதன் | மாலை 07.45 மணி | - மஞ்சம் புறப்பாடு |
| 30.06.2017 | வெள்ளி | காலை 05.00 மணி | - ஆனி உத்தரம் |
| 30.06.2017 | வெள்ளி | மாலை 06.00 மணி | - வேட்டைத்திருவிழா |
| 01.07.2017 | சனி | மாலை 07.45 மணி | - சப்பறம் புறப்பாடு |
| 02.07.2017 | ஞாயிறு | காலை 11.00 மணி | - சுவாமி தேரேறி வீதி உலா வருதல் |
| 03.07.2107 | திங்கள் | காலை 10.00 மணி | - தீர்த்தத் திருவிழா, இரவு 7.30 மணி கொடி இறக்கம் |
| 04.07.2017 | செவ்வாய் | இரவு 07.00 மணி | - திருக்கல்யாண உற்சவம் - பொது உபயம் |
| 05.07.2017 | புதன் | மாலை 07.00 மணி | - பைரவர் மடை |

அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு ஆசாரசீலர்களாய் வருகை தந்து, ஆலய நடை முறைகளுக்கு அமைவாக வழிபாட்டிற் கலந்து கொண்டு புண்ணியப்பேறு பெறுவதுடன் தாயகத்தில் நிலையான சாந்தியும், சமாதானமும், அமைதியும் ஏற்படவும் எல்லோரும் சகல செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழவும் வழிபாடு செய்வோமாக.

**குறிப்பு: இம்மகோற்சவ விசேட நாட்களில் பூஜை நேரத்தில் சிறு மாற்றம் ஏற்படும்.**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஆலய நிர்வாகம்

உ
சிவமயம்



# உயர்வாசற்குன்று முருகன் கோயில்

## BRITTANIA HINDU (SAIVA) TEMPLE TRUST

Registered Charity No: 269067
200A Archway Road, London N6 5BA | Tel:0208 348 9835 |Fax: 0208 482 6508
Email: Secretary@highgatehillmurugan.com |Web: www.highgatehillmurugan.org

# ANNUAL FESTIVAL - 2017

The Annual Festival of the Highgatehill Murugan Temple will commence on Monday 19th June 2017 with the flag hoisting ceremony and will conclude with the flag lowering ceremony on Monday 3rd July 2017. The Poongavanam (Thirukkalyaanam) festival will be held on Tuesday 4th July 2017 and Vairavar Madai on Wednesday 05th July 2017.

## Daily Timing of Festival from Tuesday 20.06.17 to Saturday 01.07.2017

### MORNING

| | |
|---|---|
| 08:30 | Abishegam Commences |
| 09:45 | Pooja |
| 10:30 | Kodiththamba Pooja |
| 11:15 | Vasantha Mandapa Pooja followed by Veethi Ula |
| 12:30 | Evening: Day festival concludes |

### EVENING

| | |
|---|---|
| 17:45 | Evening Pooja |
| 18:45 | Kodiththamba Pooja |
| 19:15 | Vasantha Mandapa Pooja followed by Veethi Ula |
| 21:30 | Evening festival concludes |

## Mahotsava Festival

| | | |
|---|---|---|
| 18.06.2017 | 09:30 am | Ganapathy Homam |
| 19.06.2017 | 11:30 am | Flag Hoisting Ceremony followed by the day festival |
| 26.06.2017 | 07:45 pm | Kailaya Vaganam |
| 27.06.2017 | 06:15 pm | Mambalath Thiruvila (Mango Festival) |
| 28.06.2017 | 07:45 pm | Manjam |
| 30.06.2017 | 05:00 am | Aani Uththaram |
| 30.06.2017 | 06:00 pm | Vettai Thiruvila ( Hunting Ceremony) |
| 01.07.2017 | 07:45 pm | Sapparam |
| 02.07.2017 | 11:00 am | Chariot Festival Chariot procession outside the Temple |
| 03.07.2017 | 10:00 am | Theertham (Water Cutting Ceremony) |
| | 07:30 pm | Kodi Irakkam ( Flag Lowering Ceremony) |
| 04.07.2017 | 07:00 pm | Poongavanam (Thirukkalyana Festival (Public Ubayam) |
| 05.07.2017 | 07:00 pm | Vairavar Madai |

**Devotees are expected to strictly adhere to Saiva principles during the festival season, and abide by the Temple rules. The timings shown above may slightly deviate in special circumstances.**

Temple Management



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£99
மட்டுமே
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
£99
மட்டுமே
VIJAY
தமிழ்
KTV
SUN MUSIC
SUN LIFE
45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான Tamil திரைப்படங்கள்
EROSNOW
6000க்கும் அதிகமான Hindi & Tamil திரைப்படங்கள்
BANJO
Ki & Ka
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
Roku
tv
AirPlay
chromecast
amazon fireTV
kindle fire
XBOX
SUBSCRIBE NOW!
UNITED KINGDOM
0207 132 2727
Go Online
www.lycatv.tv

# என் அன்பு இனியவர்களே...

லண்டனில் தமிழர் தகவல் கடந்த பதினாறு ஆண்டுகளாக பல்வகை இன்னல்கள் தாண்டி வெளிக்கொண்டுவரப்பட்டதை அறிவீர்கள். சொல்லவேண்டிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட காலங்களில் மனக் கசப்புகளும் வராமலில்லை. எனினும் என்னிடம் எவர்மேலும் எந்தச் காழ்ப்புணர்வுகளும் இல்லை. அவை சந்தர்ப்ப வெளிப்பாடுகளாகவே இருந்தன. நான் உண்மையானவர் அதனால் தற்போது பொருளாதாரத்தில் நலிந்துள்ளேன். உங்களிடம் உதவி கேட்கின்றேன்.

இதழைத் தொடர்ந்து நடத்த நிதிதேவை. ஆர்வமுள்ள அன்பர்களிடமிருந்து அன்பளிப்புகளை எதிர்பார்க்கிறேன். ஒரு நிரந்தவைப்பினூடாகப் பெறும் வருமானத்திலிருந்து இந்த இதழைப் தொடர்ந்து வெளியிட எண்ணுகிறேன்.

தங்கள் ஆதரவின் பலம்தான் இதன் எதிர்காலம்.

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

# சுபவீயின்

## ஒருநாள் ஒரு நிமிடம்

### அம்பேத்கர் மணிமண்டபம்

*1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் ஓர் கூட்டத்தில் பேசுகிற போது பேரறிஞர் அண்ணா அவர்கள் அம்பேத்கர் பற்றிய பல செய்திகளை விரித்து உரைத்து இருக்கிறார்கள். அவர் எழுதியிருக்கிற நூல்களை பற்றி தன் கருத்துகளைம் கூறியிருக்கிறார். எல்லா வற்றையும் தாண்டி அம்பேத்கர் என்பவர் ஒரு குறிப்பிட்ட ஒடுக்கபட்ட மக்களுக்கு மட்டும் உரியவர் இல்லை அவர் அனைத்து சமூக நீதி வேட்கை உடையவர்களுக்கும் உரியவர் என்ற கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார் அது மட்டுமின்றி அன்றைக்குப் பேசும்போது தமிழ்நாட்டில் அம்பேத்பருக்கு ஒரு மணிமண்டபம் எழுப்பப்பட வேண்டும் என்ற ஆசையை வெளியிட்டிருக்கிறார். மிகுந்த வியப்புக்குரியதாக அவருடைய ஆசை 42 ஆண்டுகளுக்குப்*



பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**

பிறகு நிறைவேறி இருக்கிறது. 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் தேதி தலைவர் கலைஞர் அவர்கள் அம்பேத்கர் மணிமண்டபத்தை சென்னையில் திறந்து வைத்தார் என்பதை நாம் அறிவோம்.

அழுகையும் சிரிப்பும்


ஒரு மேடையில் அரசுத்துறை அதிகாரியாக பணியாற்றும் ஒருவரை சந்தித்தேன். அவர் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு காவல்துறையினரால் அடிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார். அன்றைக்குக் காவல் துறையினர் சூழ்ந்து நின்று அவரை அடித்த அடி பற்றி மேடையிலே சொல்லி அதனை நகைச்சுவையாக வர்ணித்தார். எல்லோரும் சிரித்தார்கள். வாழ்க்கை எவ்வளவு முரண்பாடுடையதாக இருக்கிறது. அன்று அடி வாங்கியதை இன்று நினைத்து சிரிக்கிறோம். சில வேளைகளில் நாம் பேசிச் சிரித்திருந்த நாட்களை நினைத்து அழுகிறோம். வலி சிரிப்பைத் தருகிறது சிரிப்பு வலியைத் தருகிறது. வாழ்வில் எது இன்பம்? எது துன்பம்? அப்படியெல்லாம் சட்டென்று பிரித்துவிட முடியாது. எல்லாம் கலந்தே கிடக்கின்றன.


ரப்பர் மரங்கள்

நாகர்கோயிலுக்கு அருகில் உள்ள மாறாமலை என்னும் சிறு குன்றுக்குச் சென்றபோது சில காட்சிகள் சில புதிய அனுபவங்களை தந்தன. ஒரு காட்டுப்பாதை வழியாக மேலே ஏறினால் எங்கு திரும்பினாலும் எல்லாப் பக்கங்களிலும் ரப்பர் மரங்களே நின்று கொண்டிருந்தன. அந்த ரப்பர் மரங்களில் தொழிலாளர்கள் பாடுபட்டு ரப்பர் மரத்தின் பாலை எடுத்துக்கொண்டிருந்தார்கள். திரும்பி வந்ததற்குப் பின் அந்தக் காட்சி குறித்து நான் இப்படி எழுதினேன். “வெட்டுக்கத்தி பட்டுப் பட்டுக் கொட்டிய பாலை கொட்டாங்குச்சியில் எடுத்துச் சேர்த்தனர் , உழைத்ததற்கான வடுக்கள் அவர்கள் வாழ்விலும் இருந்தது’ என்று எழுதினேன். அந்த ரப்பர் மரங்களின் காயத்தை நம்மால் வெளிப்படையாகப் பார்க்க முடிந்தது. ஆனால் ரப்பர் மரங்களில் பாலை எடுக்கும் அந்தத் தொழிலாளர்களின் வாழ்க்கை அதே போன்ற காயங்களும் ரணங்களும் மிகுந்திருப்பதைப் பார்க்கமுடியவில்லையே தவிர உணர முடிந்தது.

பகத்சிங்

86 ஆண்டுகளுக்கு முன்னால் மார்ச் 23இல் பகத்சிங், இராஜகுரு, சுக்தேவ்





மூவரும் தூக்கில் ஏற்றப்பட்டனர். 1929 ஏப்ரல் வரையில் பகத் சிங் என்றால் யார் என்றே இந்தியாவில் ஒருவருக்கும் தெரியாது. 1929க்கு பிறகு கூட சட்டமன்றத்தில் பேசிய இரண்டு இளைஞர்களில் ஒருவர் என்பதாக மட்டுமே அவர் அறியப்பட்டிருந்தார் ஆனால் 1931 மார்ச் மாதம் 23ம் தேதி இரவு 7 மணி 33 நிமிடத்திற்கு அவர்கள் மூவரும் தூக்கிலிடப்பட்ட பிறகு இந்தியா முழுவதும் மூவரின் புகழும் பரவிற்று. குறிப்பாக பகத்சிங் இந்திய இளைஞர்களின் மிகப்பெரிய கதாநாயகனாக வலம் வந்தார்.. பட்டாபி சீத்தாராமைய்யா எழுதுகிறபோது 1931ம் ஆண்டு காந்தியாருக்கு இந்தியாவில் என்ன புகழ் இருந்ததோ அதே அளவிற்கு புகழ் பகத்சிங்கிற்கும் இருந்தது என்கிறார். மார்ச் 23 பகத்சிங்கின் நினைவு நாள்.

உறக்கமும், படிப்பும்

நம் நண்பர்கள் பலர் இப்படிச் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். நீங்களும் கேட்டிருக்கலாம். படுத்தால் உறக்கம் வரவில்லை என்கிறார்கள். படித்தால் உறக்கம் வந்து விடுகிறது என்கிறார்கள்.

உறக்கம், சிந்தனை இரண்டுமே மனிதர்களுக்குத் தேவைதான். ஆனால் உறங்க வேண்டிய நேரத்தில் சிந்திப்பதும், சிந்திக்க வேண்டிய நேரத்தில் உறங்குவதுமான நடைமுறைப் பிழைதான் இதற்கு காரணம். எப்போதும் உறக்கம் வருகிறது என்று சொன்னால் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு உறங்கிவிடுவது கூட நல்லதுதான். உறக்கம் தெளிந்து எழுந்து படித்தால் கண்டிப்பாக மீண்டும் உறக்கம் வராது. இன்னொன்று நாம் படிக்கும் புத்தகத்தில் நமக்கு ஈடுபாடும் படிக்கவேண்டிய தேவையும் இருக்குமானால் உறக்கம் நம்மை விட்டு ஓடியே போய்விடும். அது போல உறங்குவது என்பதும் தேவையான கலை. படுத்தவுடன் உறங்குவது என்பதும், தொட்டவுடன் எழுவது என்பதுமாக நம் உடலை பழக்கப்படுத்திக் கொண்டால் அதைவிட ஆனந்தம் வேறெதுவும் இருக்க முடியாது.

# லண்டனில் முள்ளிவாய்க்கால்



லண்டனில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு தினத்தில் கலந்து கொண்டவர்கள் "தமிழினப்படுகொலையை, உலக மனச்சாட்சியை உலுப்பும் திறவுகோலாக மாற்றுவோம்" என்று உறுதியெடுத்துக் கொண்டனர்.

நீண்ட சவால்களையும், அச்சுறுத்தல்களையும் மீறி கொட்டும் மழைக்கும், குளிருக்கும் மத்தியில் பிரித்தானிய தமிழர் பேரவையினரின் ஏற்பாட்டில் லண்டன் மாநகரில் மாலை 5 மணிக்கு Hyde Park இல் ஆண், பெண், இளையோர், முதியோர், குழந்தைகள் பெருமளவில் மக்கள் திரண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவெழுச்சி தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அகவணக்கத்தைத் தொடர்ந்து இறுதிவரை முள்ளிவாய்க்கால் கொடுமைகளிலிருந்து மீண்ட வாழும் சாட்சியமாய் இந்த நாட்டிற்கு புலம்பெயோர்ந்தோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தமிழினப்படுகொலையில் கொல்லப்பட்ட எம் உறவுகளுக்கு மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.



இனவாத சிறிலங்கா அரசினால் 1956ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரை கொடூரமாக தமிழ்மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் "CONTINUING GENOCIDE WITH IMPUNITY" எனும் தலைப்பில் தமிழர் தாயகத்தின் மாவட்டரீதியாக இடம், ஆண்டு, திகதி என வகைப்படுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

முன்னாள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற தலைவருமான ஜேம்ஸ் பெரி (James Berry), முன்னாள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உப தலைவர் வெஸ் ஸ்ட்ரீட்டிங் (Wes Streeting), முன்னாள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் லீ ஸ்கொட் (Lee Scott), ஹன்னா டேவிட் (Hannah David), மக்ஸ்வல் ஸ்கொட்(MJ Maxwell Scott) மற்றும் மேலும் பலர் உரை நிகழ்த்தினர்.

மேலும் லேபர் கட்சி தலைவர் ஜெரமி கோபன் (Jeremy Corbyn), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பால் ஸ்கல்லி (Paul Scully), ஜோன் ரயன் (Joan Ryan), பொப் ப்ளாக்மன் (Bob Blackman), கரத் தோமஸ் (Gareth Thomas) ஆகியோரால் வழங்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு நாள் செய்திகளும் பகிரப்பட்டது.

தமிழகத்திலிருந்து வருகை தந்த முள்ளிவாய்க்கால் உணர்வின் வலிகளை ஓவியமாக தந்த ஓவியர் திரு. புகழேந்தி அவர்களால் காலத்தின் தேவை கருதி தமிழர்கள் நாம் கருத்து வேற்றுமைகளை களைந்து எமக்குள் ஒற்றுமையாக இணைந்து பொது எதிரியான சிங்களத்தினை வென்றெடுக்க வேண்டும் என்று கூறினார்.

நல்லாட்சி அரசு என்று கூறிக் கொள்ளும் தற்போதைய அரசிலும் தொடரும் இனப்படுகொலைகளை நிறுத்து ("STOP ONGOING GENOCIDE OF TAMILS") என்னும் தொனிப்பொருளில்

1. STOP CULTURAL GENOCIDE (கலாச்சார அழிப்பினை நிறுத்து)

2. IMPUNITY TO COMMIT GENOCIDE (இன அழிப்பினை மேற்கொள்வோரை பாதுகாக்காதே)

3. OCCUPYING PEOPLE'S LAND (மக்களின் நிலத்திலிருந்து வெளியேறு)

4. DESTROYING TAMIL PEOPLES IDENTITY (தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்களை அழிக்காதே)

என நான்கு வகைப்படுத்தப்பட்டு முன்னாள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அதனை வழிமொழியும் விதமாக கையெழுத்து பெறப்பட்டது.

அனைத்து சமூகத்தினருக்கும் ஏற்றவாறு தமிழ், ஆங்கிலம் கலந்து உணர்வின் வெளிப்பாடுகளை பிரதிபலித்து படைக்கப்பட்ட நாட்டிய நடனத்துடன், முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கவிதை நெஞ்சை உருக்கும் விதமாக அமையப்பெற்றது.

ஓரிடத்தில் கூடி அழுது அஞ்சலி செலுத்தி மனக்கவலைகளை ஆற்றுவதோடு மட்டும் நில்லாமல் நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற






இனப்படுகொலைகளுக்கான நீதி கோரும் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவை ஒவ்வொரு ஆண்டும் செய்து வருகின்றது.

கடந்த ஆண்டு சிறிலங்கா படைகளினால் சரணடைந்த, வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான, "அவர்கள் உயிரோடு உள்ளார்களா?" (ARE THEY ALIVE?) என்ற தொனிப்பொருளை முன்னிறுத்தி பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தாயக விடுதலைக்காகவும், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட படுகொலைகளுக்கும், அநீதிகளுக்கும் பிரித்தானிய தமிழர் பேரவை தொடர்ச்சியாக குரல் கொடுக்கும், சர்வதேச நாடுகளை எம் பக்கம் திருப்பி நீதியை பெறுவதற்கு அயராது செயற்படும்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"



# தொன்மையான மொழி

# தமிழ் மொழி

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு**

பாவேந்தர் பாரதிதாசனின் இந்தக் கவிதை வரிகள் தமிழர் நெஞ்சங்களையெல்லாம் நிமிர்ந்து நிற்கச் செய்யும் வீரவரிகளாம். இவரது கவிதைகளில் எங்கு நோக்கினும், தமிழ் மொழியின் சிறப்புகளும், ஈடுஇணையற்ற வரலாற்றுச் செய்திகளும் நிறைந்து கிடக்கின்றன. மேலும் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் அனைத்திலும் மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும், தமிழ்க் கூறும் நல்லுலகம் மகிழ்ந்து பாராட்டும் வண்ணம் அமைந்திருக்கின்றன. பாவேந்தர் மட்டுமா? இருபதாம் நூற்றாண்டின் கவிஞர்கள் அனைவரும் தமிழை தன்னிகரில்லாத் தொன்மொழியாகவும், செம்மொழியாகவும், உச்சி மீது வைத்துப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நம் தாய்மொழியாகிய தமிழின் தொன்மையும், குன்றாத இலக்கியச் செறிவும், காலத்திற்குக் காலம் தேவையான பரிமாணத்தைப் பெற்று புதுப்பொலிவுடன் விளங்குவதும் ஆகும்.

வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் உலகின் மூத்த மொழிகளாக ஆறு மொழிகளைப் பட்டியலிடுகின்றார்கள். அவை தமிழ், அரபி, சீனம், லத்தீன், ஈப்ரு, சமஸ்கிருதம்.இம்மொழிகளில் தொன்மையும், இலக்கணச் செறிவும், அனைத்து வடிவங்களும் உடைய எழுத்து வடிவமும், கடந்த 2500 ஆண்டுகளாக மாறாமல் இருப்பதும் தமிழ் மொழியே என்று ஆராய்ச்சியாளர்கள் எடுத்துரைக்கின்றார்கள். இக்கருத்தின் அடிப்படையில், 'கின்னஸ் சாதனை' புத்தகத்திலும் இதே செய்தியினை வெளியிட்டுள்ளது போற்றத்தக்கது.6000 ஆண்டுகளுக்கு முன்னரே தர்க்க சாஸ்திரத்தில் மிகச்சிறந்த வல்லுனர்கள் எல்லாம் தமிழ் மொழியினை எழுதவும், பேசவும் கற்றுக்கொண்டு உலகம் முழுவதும் சென்றிருப்பது தரைச் செலவு




என்னும் பயணக் கட்டுரைகளின் மூலம் நமக்குக் கிடைக்கிற செய்தியாகும்.

கன்னியாகுமரியில் இருந்து, காஷ்மீர் வரை பேசப்பட்டு வருகிற இந்திய மொழிகள் அனைத்திலும் தமிழ் மொழியின் படிமங்கள், வடிவங்கள் அப்படியே இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தென்னிந்திய மொழிகளில் தமிழின் சாயல் நேரடியாக விளங்கும்.ஆனால் வட இந்திய மொழிகளில் கொஞ்சம் உள்ளே சென்று பார்த்தால் அக்கு வேறு ஆணி வேறாகப் புலப்படும். மராட்டிய மொழியில் இலக்கண அமைப்பும், கவிதைகளின் வடிவங்களும் தமிழை ஒத்து இருக்கின்றன. தாய், அண்ணா, மாமா, அத்தை, ஆயி என்கிற உறவுமுறைச் சொற்களும் கீழே, உயரே, சுருக்கம், வயது, சாயும் காலம் (மாலை), போர் முரசு மற்றும் எண்ணற்ற சொற்களும் முழுமையாக அதே வடிவத்தில் கலந்தும், பல நூற்றுக்கணக்கான சொற்கள் கொஞ்சம் சிதைந்தபடியும் மராட்டிய மொழியில் கலந்திருப்பது நோக்கத்தக்கது.

நான் தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபாடு உடையவன் என்பதால் இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சென்று வருகின்றேன். அப்படி நான் சொல்லுகின்ற போதெல்லாம், இம் மொழிக்கலப்பின் ஆதாரங்களையும், தமிழ் மொழியின் படிமங்களையும், அந்த அந்த மாநில மொழிகளில் என்னால் பார்க்க முடிகின்றது.

மேலும், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் வாழும் ஆதிவாசிகள் அனைவரும் தமிழை ஒத்த தமிழின்

திரிபான மொழியையே இன்றுவரை பேசிவருகிறார்கள்.பல மாநிலங்களிலுள்ள காட்டுவாசிகள், மலைவாழ் மக்களின் பெயர்கள், புலி, பூனை, பாம்பு, கோழி, குயில், மல்லிகை என்று அப்படியே தமிழில் வழங்கி வருகின்றன.

தமிழ் மொழியின் பெருமையினைப் பாடவந்த மனோன்மணி இலக்கியத்தின் ஆசிரியர் திரு.பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள்,

கன்னடமும் களி தெலுங்கும் கவின்
மலையாளமும் துளுவும் பிறவும்,
உன் உதிரத்தே உதித்தெழுந்து
ஒன்று பல வாயிடினும்
ஆரியம் போல் உலகு வழக்கு
அழிந்து ஒழிந்து சிதையாஉன்
சீரிளமை திறன் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!

என்று பாடிப் பெருமைப் படுகின்றார். இக்கவிதை வரிகளின் மூலமாக நாமறிந்து கொள்ள வேண்டியது, தென்னிந்திந்திய மொழிகள் தமிழினின்று வந்தவை என்பதையும், ஆரியம் என்னும் சமஸ்கிருத மொழி வடமொழிக் கூட்டத்தில், கலந்துவிட்ட பிறகு, பேச, எழுத ஒரு மக்கள் கூட்டம் இல்லாது அழிவுப்பாதையில் சேர்ந்துவிட்டது என்பதையும், தமிழ் மொழி இன்னமும் இளமை குன்றாத பரிமாணங்களோடு சிறந்து விளங்குகிறது என்பதனையும், நாம் புரிந்து கொள்ளலாம். இப்படிக் கூறுவது மொழிப்பற்றின் மிகுதி என்று சிலர் பேசுவதுண்டு. அப்படிப் பேசுகிற சிலருக்கு பாரதியார் என்னும் தேசியகவிராஜன் கொடுக்கிற சாட்டையடியைப் பாருங்கள். பாரதி 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இணையற்ற தமிழ்க்கவி. அவர் தமிழ் மொழியிலே தோன்றிய ஓர் உலக கவி என்று இமயத்தின் உச்சியில் வைத்து பாரதிதாசன் பாராட்டுவார்.

பாரதி சொல்கிறார்–

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறளுறுதியும்
தெளிவும் பொருளின்
ஆழமும், விரிவும்
அழகும் கருதியும்
எல்லையொன்றின்மை
எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற்
காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்
முன்பு நான் தமிழ்ச்
சாதியை அமரத்தன்மை
வாய்ந்தது என்று
உறுதி கொண்டிருந்தேன்.

இக்கூற்றிலிருந்து தமிழினம் அமரச்சாதியாக இன்னும் நிலை பெற்றிருப்பதற்கு, தமிழ் மொழியின் ஈடு இணையற்ற இலக்கியச் செம்மை காரணமாயிருக்கின்றது என்பது புலனாகின்றது. மேலும் பாரதி தமிழைப் போற்றுகிற பாங்கினை,


“யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்“

என்னும் வரிகளில் உலக மொழிகளோடு தமிழ் மொழியைப் போட்டிபோட வைத்து, தமிழின் இனிமையைப் பாராட்டியிருப்பது நோக்கத்தக்கது.

தமிழின் தொன்மைக்கு, இதன் இலக்கியச் சான்றுகள் மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அகழ்வராய்ச்சியில் கிடைத்த செப்பேடுகள், கல்வெட்டுகள், நாணயங்கள் ம்ற்றும் பல பொருட்களில் கிடைக்கப்பெற்ற செய்திகளும் தமிழினத்தின் நாடுகளில் இதற்குக் கிடைத்துள்ள வரலாற்றுச் சான்றுகள், ஆவணங்களின் மூலம் தமிழ்மொழி, இனம் பழமைவாய்ந்த, தன்னிகரில்லா செம்மொழி என்பது புலனாகின்றது.

# உணவே மருந்து

**எஸ்.எம்.செய்யது முகமது**



*சீரான உடல் நலத்திற்கு சீரகம்*

அன்றாட உணவில் சேர்த்து வரும் சீரகம் உடல் எடையை வேகமாக குறைக்க உதவும் என்பது தெரியுமா? அதிலும் தினமும் சீரகத்தை தொடர்ந்து எடுத்து வந்தால், 20 நாட்களில் நல்ல மாற்றத்தைக் காணலாம். சீரகம் உடல் எடையைக் குறைக்க உதவுமா என்பது குறித்து சமீபத்தில் ஆய்வு ஒன்று நடைபெற்றது.

அந்த ஆய்வில் உடல் பருமனான 88 பெண்களை தினமும் சீரகத்தை உட்கொண்டுவரச் செய்ததில், உடல் மெட்டபாலிசம் அதிகரித்து, செரிமானம் சீராகி, கலோரிகள் வேகமாக எரிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அதுமட்டுமின்றி, சீரகம், வேறு பல நன்மைகளையும் உள்ளடக்கியுள்ளதாம்.

சரி, உடல் எடையை வேகமாகக் குறைக்க சீரகத்தை எப்படி எடுக்க வேண்டும் என பலரும் கேட்கலாம். உங்களுக்கு மிகவும் வேகமாக 15 கிலோ எடையைக் குறைக்க ஆசை இருந்தால், கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகளில் உங்களுக்குப் பிடித்ததை தேர்ந்தெடுத்து, அந்த வழியில் சீரகத்தை உட்கொண்டு வாருங்கள்.

### சீரகத் தண்ணீர்

2 டேபிள் ஸ்பூன் சீரகத்தை நீரில் போட்டு இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் அந்த நீரைக் கொதிக்க வைத்து, வடிகட்டி, அதில் சிறிது எலுமிச்சையை பிழிந்து, இரண்டு வாரத்திற்கு தினமும் காலையில் குடித்து வர, விரைவில் உடல் எடை குறைந்திருப்பதைக் காணலாம்.

### சீரகப் பொடி மற்றும் தயிர்

மற்றொரு வழி சிறிது தயிரில் 1 டீஸ்பூன் சீரகப் பொடி சேர்த்து கலந்து தினமும் உட்கொண்டு வந்தால், உடல் எடையைக் குறைக்கலாம்.

### சீரகப் பொடி மற்றும் தேன்

1/2 டீஸ்பூன் சீரகப் பொடியை நீரில் சேர்த்து, அதோடு தேன் கலந்து தினமும் குடித்து வருவதன் மூலமும் உடலில் உள்ள கொழுப்புக்களைக் கரைத்து உடல் எடையைக் குறைக்கலாம்.

### சூப்புடன் சீரகப் பொடி

உடல் எடையைக் குறைக்க நினைப்போர் தினமும் சூப்புடன் சீரகப் பொடியை ஒரு டீஸ்பூன் சேர்த்து கலந்து குடித்து வர, உடல் எடை குறையும்.

### எடையைக் குறைக்கும் சீரக ரெசிபி

எலுமிச்சை மற்றும் இஞ்சி எடையைக் குறைக்க உதவும் பொருட்களில் முதன்மையானவை.


அதிலும் சீரகத்துடன் சேர்ந்தால், இதன் சக்தி அதிகமாகும். அதற்கு ஒரு பாத்திரத்தில் கேரட் மற்றும் பிடித்த வேறு காய்கறிகளை சேர்த்து நன்கு வேக வைத்துக் கொள்ளவும். பின் அந்த காய்கறிகளில் இஞ்சியை துருவிப் போட்டு, எலுமிச்சை சாறு, சீரகப் பொடி சேர்த்து கலந்து, இரவு நேரத்தில் உட்கொண்டு வர, உங்கள் எடை குறைவதை நன்கு காணலாம்.

### தொப்பையைக் குறைக்கும் சீரகம்

சீரகம் உடலில் கெட்ட கொழுப்புக்கள்



# சளியில் இருந்து உடனடி நிவாரணம் தரும் சீரகம்..!



சேர்வதைத் தடுத்து, அதிகப்படியான கலோரிகளை எரிக்கும். ஏனெனில் இதில் உடலின் மெட்டபாலிசத்தை அதிகரிக்கும் ஊட்டச்சத்துக்களும், ஆன்டி ஆக்ஸிடன்ட்டுகளும் ஏராளமாக உள்ளது. இதனால் இவற்றை அன்றாட உணவில் எடுத்து வந்தால், கொழுப்புக்களால் அதிகரித்த தொப்பையைக் குறைக்கலாம்.

சீரகத்தின் வேறுசில நன்மைகள்

மாரடைப்பைத் தடுப்பது, ஞாபக சக்தியை அதிகரிப்பது, நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலிமைப்படுத்துவது, இரத்த சோகையை சரிசெய்வது, செரிமானத்தை மேம்படுத்துவது, வாய்வு தொல்லையை நீக்குவது போன்றவற்றை குணமாக்கும் சக்தி சீரகத்திற்கு உண்டு. தினமும் 1 டீஸ்பூன் சீரகம் சாப்பிட்டா 15 கிலோ வரை குறைக்க முடியும்

கை மருத்துவம்

மூன்று ஏலக்காயை பொடியாக்கி நெய்யை பொடி மூழ்கும் அளவு ஊற்றி அடுப்பில் காய்ச்சவும். பிறகு கலக்கி வடிகட்டி எடுத்து இரண்டு சொட்டுகள் படுத்தவாறு மூக்கில் விட்டு கொண்டால் மூக்கடைப்பு நீங்கும்.

வெற்றிலை, மூன்று மிளகு ஆகியவற்றை மென்று விழுங்கினால் நீர்க்கோவை, தலைபாரம் ஆகியவை குணமாகும்.

எப்போதும் மூக்கு ஒழுகிக் கொண்டே இருந்தால் ஜாதிக்காயை தண்ணீர் விட்டு உரசி அதைச் சூடேற்றி மூக்கு, நெற்றி மீது பூசினால்

மூக்கு ஒழுகுவது நிற்கும்.

சுக்கைத் தட்டி அதை கஷாயமாகப் போட்டு தேனுடன் கலந்து சாப்பிட்டால்

சளித்தொல்லை போய்விடும்.

புளியமரப்பூ, உப்பு, மிளகாய், தேங்காய் இவற்றைச் சேர்த்து அரைத்தால் புளியமரப்பூ சட்னி ரெடி; ருசியானது. இட்லிக்கு தொட்டுக் கொண்டால் சுவையாக இருக்கும்.

இருமலை போக்கும்.

மாவு அரைக்கும்போது இரண்டு மூன்று வெண்டைக்காய்களை நறுக்கிப் போட்டு, ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணையும் சேர்த்தால் இட்லி மல்லிப்பூ போல மிருதுவாக இருக்கும்.


திரை விமர்சனம்
பாகுபலி - 2

கதையின் போக்கு, திரைக்கதை, கதாபாத்திரங்கள், கற்பனையை நம்பத்தகுந்த காட்சிகளாக உருவாக்கிய விதம் போன்ற அம்சங்களால் கவனம் ஈர்த்த 'பாகுபலி' படத்தின் இரண்டாம் பாகம் மீதான எதிர்பார்ப்பு அபரிமிதமாக இருந்தது. முதல் பாகத்தில் எழுந்த கேள்வி களுக்கு இரண்டாம் பாகம் எப்படிப்பட்ட பதில்களைத் தரப்போகிறது என்பதும் எதிர்பார்ப்புக்கு இன்னொரு காரணம். இந்த இரண்டு அம்சங்களிலும் 'பாகுபலி 2' எப்படி?

மகிழ்மதி சாம்ராஜ்ஜியத்தின் ராஜ மாதா சிவகாமி தேவியின் (ரம்யா கிருஷ்ணன்) மதிநுட்பம் மிகுந்த நிர்வாகத்தால் தலை நிமிர்ந்து நிற்கிறது அந்த நாடு. மகேந்திர பாகுபலியை (பிரபாஸ்) அரசனாக அறிவித்து அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நாள் குறிக்கிறார். அதற்கு முன் தேசம் முழுவதும் பயணம் செல்லும் பாகுபலி, குந்தள நாட்டின் இளவரசி தேவசேனாவைக் (அனுஷ்கா) கண்டு காதல் கொள்கிறார். பாகுபலியின் சகோதரன் பல்லாளத்தேவன் (ராணா டக்குபதி) இதை அறிகிறான். தனக்குக் கிடைத்திருக்க வேண்டிய அரியாசனம் பாகுபலிக்குப் போவதை எண்ணி வன்மம் கொள்ளும் அவன், அரியணையுடன் தேவசேனாவையும் அடைய சூழ்ச்சிவலை பின்னுகிறான். தந்தை பிங்களத்தேவனின் (நாசர்) சகுனித்தனங்கள் வழிநடத்துகின்றன. அந்த சூழ்ச்சியின் விளைவுகள்தான் 'பாகுபலி 2'வின் கதை.

இரண்டாம் பாகம் என்றால், முதல் பாகத்தில் எழுந்த எல்லாக் கேள்வி களுக்கும் நம்பும்படியான விடைகள் இருக்க வேண்டும். அதை அழுத்தம் திருத்தமாக நிறைவு செய்துவிடுகிறது 'பாகுபலி 2.' கட்டப்பா மகிழ்மதி சாம்ராஜ்ஜியத்தின் பரம்பரை அடிமைத் தளபதி என்றபோதும் அவரைத் தாய் மாமனாக ஏற்றுக்கொண்ட இளவரசன் பாகுபலியை அவர் ஏன் கொன்றார் என்ற கேள்விக்குத் தரப்பட்டிருக்கும் விடையே இதற்குச் சிறந்த உதாரணம். இதற்கு விடைசொன்ன விதத்தின் மூலம் கட்டப்பா



கதாபாத்திரத்தை மட்டுமல்ல; சிவகாமி, பாகுபலி, தேவசேனா கதாபாத்திரங்களுக்கு இடையிலான பிணைப்பையும், அவர்களின் குணவியல்புகளையும், அவற்றின் மாறுபாடுகளையும் உணர்த்துகிறார் இயக்குநர் எஸ்.எஸ். ராஜமவுலி. எந்தக் கதாபாத்திரமும் சோடைபோகாத வண்ணம் உரு வாக்கப்பட்டுள்ளது இந்தப் படத்தின் சிறப்புகளில் ஒன்று.

திரைக்கதையில் அழுத்தமும் இறுக்கமும் நெகிழ்வும் கடைசி வரை பிணைந்திருக்கின்றன. பிரமிக்க வைக்கும் காட்சிகளைக் கொண்ட இந்தப் படம் காட்சி அனுபவத்தை மட்டுமே நம்பிவிடவில்லை. கதைக் கும் திரைக்கதைக்கும் அழுத்தம் கொடுத்து, அதற்குத் துணைபுரிவதற் காகவே பிரம்மாண்டம் சேர்க்கப் பட்டுள்ளது.

கற்பனையும் அழகியலும் சந்திக்கும் பிரம்மாண்டமான காட்சி யமைப்பு இந்தப் படத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்று. அரண்மனை வெளி, உள் தோற்றம், அலங்காரம், கதாபாத்திரங்களின் வீரம் வெளிப் படும் காட்சிகள், ரம்மியமான காதல் காட்சிகள், நிலக் காட்சிகள், ஆயுதங் கள், போர்க்களக் காட்சிகள் என எல்லாமே கவனமாகச் செதுக்கப் பட்டிருப்பதில் வெளிப்பட்டு நிற்கிறது இயக்குநரின் அசாதாரணக் கற்பனை. அதற்குக் காட்சி வடிவம் தரத்தொழில் நுட்பத்தையும் பொருத்தமான நடிகர்களையும் பயன்படுத்தி, அவர்களைக் கையாண்ட விதத்தில் ஹாலிவுட் இயக்குநர்களுக்கு இணையாக ஒருபடி மேலானதுமாக ராஜமவுலியின் ஆளுமை வெளிப்பட்டிருக்கிறது.

பிரபாஸ், அனுஷ்கா இணையிடம் காணப்படும் இயல்பான இணக் கத்தைப் போலவே கட்டப்பா, பிரபாஸ் இடையிலான இணக்கமும் சிறப்பாக வெளிப்பட்டிருக்கிறது. பாகுபலி உயிரைவிடும் காட்சியில் தன்னைக் கொன்ற கட்டப்பா மீது அன்பை வெளிப்படுத்தும் அந்தத் தருணமே இந்த இணையின் பிணைப்பில் உச்சக் கட்டமாக திகழ்கிறது.

காதல் காட்சிகள் சற்றே அலுப் பூட்டத் தொடங்கும் நேரத்தில் எதிர் பாராத ஒரு திருப்பத்தின் மூலம் படம் சுதாரித்துக்கொள்கிறது. இரண் டாம் பாதியில் அடுக்கடுக்காகச் சம்பவங்கள் இருந்தாலும், கடைசிக் கட்டச் சண்டையில் யுத்த தந்திரம் சார்ந்த மதியூகம் பெரிதாக வெளிப் படவில்லை. ராணாவும் பாகுபலியும் மோதும் சண்டை நன்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்தாலும் அதை அவ்வளவு நீளமாகக் காட்டியிருக்க வேண்டுமா எனத் தோன்றுகிறது.

அனுஷ்கா ரம்யா கிருஷ்ணன் சந் திப்பு, பட்டமேற்பு விழாவில் மக்கள் விருப்பம் வெளிப்படும் விதம், பாகு பலி கொல்லப்படும் இடம் ஆகிய காட்சி கள் மனதில் நிமிர்ந்து நிற்கின்றன.

நேர்மறைக் கதாபாத்திரங்களில் பிரபாஸ், அனுஷ்கா, கட்டப்பா கதா பாத்திரங்கள் சிறப்பாக அமைந்தது போலவே, சரிவைச் சந்திக்கும் ராஜமாதா கதாபாத்திரத்தில் கம்பீரம் குறையாமல் நடித்திருக்கிறார் ரம்யா கிருஷ்ணன். பாகுபலி பாத்திரம் ஒளிர, பல்லாளன் கதாபாத்திரமும் வலிமையாக இருக்க வேண்டும். எழுத்தில் இருக்கும் வலிமையை நன்கு உள்வாங்கி வெளிப்படுத்தியிருக்கும் ராணாவின் தோற்றமும் நடிப்பும் நாயகனின் பாத்திரத்துக்கு இணை யாக அமைந்துள்ளது.

நாயக பிம்பத்தை முன்னிறுத்தும் படமாக இருந்தாலும் ரம்யா கிருஷ் ணனுக்கும் அனுஷ்காவுக்கும் கொடுக் கப்பட்டுள்ள முக்கியத்துவமும் அவர்களுக்கான வசனங்களும் கவனிக்கத்தக்க விதத்தில் இருக் கின்றன. மகிழ்மதியில் தனக்கு ஏற்படும் கசப்பான அனுபவங்களை அனுஷ்கா எதிர்கொள்ளும் விதம் அந்தப் பாத்திரத்தின் மீது மதிப்பைக் கூட்டுகிறது. நவீனத் தொழில்நுட்பம் சாத்தியமாக்கித்



தந்திருக்கும் காட்சிச் சிறப்பு, முதல் பாகத்தை விட இரண்டாம் பாகத்தில் பல மடங்கு கூடியிருக்கிறது. குந்தள நாடு எதிர்கொள்ளும் திடீர் படையெடுப்பை நிர்மூலமாக்கும் காட்சி, தேவசேனாவை மகிழ்மதிக்கு அழைத்துவரும் பாடல் காட்சி. இறுதிப் போர்க்களக் காட்சி எனத் திரைக் கற்பனையின் ஆகிவந்த எல்லையை நொறுக்கும் காட்சியமைப்புகளைச் சாத்தியமாக்கியிருக்கிறார்கள்.

கலை இயக்குநர் சாபு சிரில், அவருக்கு வலதுகரமாக நின்றி ருக்கும் வி.எஃப் எக்ஸ் மேற்பார்வை யாளர் கமலக்கண்ணன், ஒலி வடிவ மைப்பும், கற்பனையான கால கட்டத்துக்கு உயிரோட்டம் தந்திருக்கும் இசையமைப்பாளர் கீரவாணி, அகண்ட கோணங்களை அதிகமும் தேர்ந்தெடுத்து பிரம் மாண்டப்படுத்தியிருக்கும் ஒளிப் பதிவாளர் செந்தில்குமார், மிகக் கச்சிதமான வெட்டுகளை அளித்திருக் கும் படத் தொகுப்பாளர் கோத்தகிரி வெங்கடேஷ்வர ராவ் ஆகிய அனை வரும் சேர்ந்து படம் தரும் அனுபவத் தைக் கூட்டுகிறார்கள். கீரவாணி யின் பின்னணி இசையில் காட்சிகள் கம்பீரம் பெறுகிறது. உரையாடல்களை எழுதியிருக்கும் மதன் கார்க்கியும் படத்தின் தாக்கத்தைக் கணிசமாகக் கூட்டுகிறார். தேவசேனா ராஜமாதா உரையாடல்கள், தேவசேனாவிடம் பாகுபலி வாதாடுவது ஆகிய இடங் களில் வசனங்கள் கச்சிதம்.

கற்பனை வளமும் கடும் உழைப் பும் தொழில்நுட்பமும் சேர்ந்து சாத்தியப்படுத்தியிருக்கும் காட்சி அனுபவம் இந்தப் படத்துக்குப் பெருமை சேர்க்கிறது. இந்தக் காட்சி அனுபவம் வலுவான கதை, நேர்த்தி யான திரைக்கதை, சிறந்த நடிப்பு ஆகியவற்றுடன் கிடைப் பதால் சிறந்த திரை அனுபவம் சாத்தியமாகிறது. ■



# ஏன் உனை மட்டும் பிடிக்கிறது

நிலவின் முகமிருந்தும்
கதிரவனின் நிறமிருந்தும்
வானவில் வலைவிருந்தும்
பொன்நகை கூடியிருந்தும்
இதழோர சிரிப்பிருந்தும்
கார்மேக குழலிருந்தும்
பள்ளிசிடும் சிரிப்பிருந்தும்
அழகை அள்ளியிருந்தும்
இத்தனையிருக்கும் பெண்ணை
மனம் கண்டுகொள்ளவில்லையே
தேடினாலும் அழகைச்
சொல்ல முடியவில்லை
முகபாவனையில் அழகாய்ச் சொன்னவளே
கோடியிலும் கண்டிராத
அன்புள்ளம் கொண்டவளே
உன்னை மட்டும் ஏன் பிடிக்கிறது?
இது ஏன் விடை தெரியாக் கேள்வி..

# இலங்கை நீர்கொழும்பு வயோதிபர் இல்லத்திற்கு நிதி சேர்த்தல்

ஆதரவற்ற, கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு இல 100 கடற்கரை தெரு, நீர் கொழும்பு இலங்கையில் இலவச வயோதிபர் பராமரிப்பு இல்லம் ஒன்றை அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை ஆரம்பிக்க உள்ளது. இதற்கு இலங்கை ரூ 40 மல்லியன் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் 60 முதியோர்கள், அதன் பின்பு அதிகரிக்க உள்ளோம்.

இச்சபை, இல 201/1 மகாவத்தை கொழும்பு 14இல் கடந்த 40 வருடங்களாக "அன்பு இல்லம்" என்ற பெயரில் இலவச வயோதிபர் இல்லம் ஒன்றை நாடாத்தி வருகிறது. இங்கே தற்பொழுது பல இன மதங்களைச் சேர்ந்த ஆண், பெண் முதியோர் 60 பேர் பராமரிக்கப்படுகின்றனர். கடவுளின் கிருபையால் கருணை உள்ளம் படைத்தோர் நன்கொடையில் இவர்களின் லௌகீக, ஆத்மீக தேவைகளை சிறப்பாக கவனித்து வருகிறோம்.

நீர்கொழும்பில் புதிய வயோதிபர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதன் நோக்கம் இங்கே ஆதரவின்றி கைவிடப்பட்டு கஷ்டப்படும் வயோதிபர்கள் பலர் உள்ளனர். இவர்கள் மீது அனுதாபம் கொண்டு உதவ விரும்புவோர், கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை கடந்த 90 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் சேவையாற்றி வருகிறது. அதன் தலைமையின் வழிகாட்டலில் தற்பொழுது 41 கன்னியாஸ்திரி மடங்கள், 23 பாடசாலைகள், 20 இளைஞர் இல்லங்கள் இன்னும் பாலர்கள், முதியோர்கள் இல்லங்களையும் நடத்தி வருகிறது. மக்கள் சேவையே அதன் இலட்சியம், மேலதிக விபரம் வேண்டுவோர் கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள கன்னியாஸ்திரிகளைத் தொடர்பு கொள்ளவும்.



# Request for Funds to Elders Home in Negombo, Sri Lanks

Apoatobic Carmel Sisters in Sri Lanka are about to start a Charitable Elders House at No. 100, Sea Street, Negombo, Sri Lanka for the benefits of deserted and destitute elders. This is our Second Project costing SL. Rs. 40 Million to accommodate 60 Elders at the start and to increase the number later.

Our First Project for Elders, under the name "Home of Compassion" has been functioning at No. 201/1, Mahawatta, Colombo 14 for the last 40 years. Presently there are 60 Elders, both males and females of all casts races and religions. With the Grace of God and with well wishers `supports and public donations, we run this Home and look after the elders' physical and spiritual needs to the best of our abilities.



Negombo is selected for our Second Project where several elders suffer without any care and attention. Those who sympathise with them and wish to help them are kindly requested to send their contributions to the Credit of Account No. 107320117170 at the MUTUWAL Branch of NATIONAL SAVINGS BANK, Sri Lanka operated in the name of HOME OF COMPASSION, No. 201/1, Mahawatta, Colombo, 14, Sri Lanka.

The Congregation of Apostolic Carmel Sisters counting over 90 years of service in Sri Lanka presently run 41 convents, 23 schools, 20 children homes and homes for babies and elders in all parts of Sri Lanka under the guidance of Provincial Superior. Our Mission is to serve humanity.

Contributors can contact the following to get more details, if required:

(1) **Rev. Sister Rubika AC,**
Provincial Superior
Tel. : +94714524855
maryrubika@gmail.com

(2) **Rev. Sister Gnanadarshini AC,**
Bursar,
Tel. : +94772792848
Marygnana@gmail.com

(3) **Rev. Sister Mena,**
Superior Elders Home
Tel. : +94112522893

(4) **THE APOSTOLIC CARMEL**
Tel: +94112695045
acphsrilanka@gmail.com



# சமீரா மீரான்

என் அன்பு மகளின் அருமை மகளே!

மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்வது தான் வாழ்க்கை என்று நான் சொன்னதைக் கேட்ட பிறகு உனக்கு என்ன தோன்றியிருக்கும் என்று நான் சொல்லட்டுமா?

'என் வகுப்புத் தோழர்களைப் பார்த்து அவர்களின் தாத்தாவும், பாட்டியும், நன்றாகப் படித்து பெரிய பதவிக்கு வரவேண்டும். பெரிய வேலைக்குப் போய் பணக்காரர்கள் ஆக வேண்டும். என்று சொல்கிறார்கள். நீ என்ன தாத்தா உறவினர்களையும், நண்பர்களையும், மற்றவர்களையும் மகிழ்ச்சியாய் வைத்திரு என்கிறாய்.!' என்று என்னிடம் நீ கேட்க நினைத்திருப்பாய். அப்படித்தானே?

ஒன்றை நீ என்றும் மறந்து விடாதே! பணமும் பதவியும் உன் வாழ்க்கை என்னும் மரம் தரும் பழங்கள். ஆனால், உறவுகளும், உற்றவர்களும், வாழ்ந்த வாழ்க்கைதான்

# புரிதலும் பிரிதலும்

அந்த மரத்தின் வேர்களும் கிளைகளும், பழங்களைத் தராத மரங்கள் இருக்கலாம். ஆனால் வேர்கள் இல்லாமல் மரங்கள் இருக்க முடியாது!

பழங்களையும் மற்ற பலன்களையும் தர, மரங்களின் வேர்கள் உறுதியாக இருக்கவேண்டும். அதனால் தான் உறவுகளின் தேவையையும் நட்பின் அருமையையும் உனக்கு நான் சொன்னேன்.

என் தங்க மகளின் தமிழ் மகளே!

பழங்களைக் தரும் மரங்களாக இருப்பது சிறப்புதான். ஆனால் அந்த மரங்கள் தரம் பழங்கள் அவைகளுக்காக அல்ல, மற்றவர்களுக்காக!

அதனால் தான் சொல்கிறேன் நீ பெறும் கல்வி, அது தரும் பதவி, அதனால் வரும் பணம் அனைத்தும் உனக்கானவை மட்டும் அல்ல. மற்றவர்களுக்காகவும் தான்.

உறவுகளையும் நண்பர்களையும் தாண்டி, மற்றவர்களுக்காக குறிப்பாக மனித சமுதாயத்திற்காக வாழ்கிற வாழ்க்கைதான் பொருள் பொதிந்த வாழ்க்கை. இதை நான் மட்டும் சொல்லவில்லை, அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் போன்ற பல அறிஞர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

"அடுத்தவர்களுக்காக வாழும் உனது வாழ்வுதான். அர்த்தம் மிகுந்தது" என்றார் ஐன்ஸ்டீன்.

பல தலைவர்களும் அறிஞர்களும் அப்படியே வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் வரும் நாட்களில் உனக்குச் சொல்ல இருக்கிறேன்.

ஆனால், நீ வாழும் வகையறிந்து, உன் பண்பின் பலமறிந்து, உன் அறிவையும் ஆளுமையையும் உணர்ந்து, நீ வளர்க்கும் நட்பின் தன்மையறிந்து, மொத்தத்தில் உன்னை மிகச் சரியாக அளந்து, உன்னோடு தொடர்ந்து பயணிக்கப் போவது யார், யார் என்பதைக் காலத்தின் துணையோடு தீர்மானிப்பவளாக நீ வளர வேண்டும்.

நல்லவர்கள் வாழ்வில் தீயவர்கள் வரலாம், நட்பு பாராட்டியோ, உறவு கொண்டாடியோ,

தீமை செய்வோர் வாழ்வில் நல்லவர்களும் குறுக்கிடலாம்.

உன் வாழ்வில் சிலமாற்றங்கள் உன் விருப்பம் போல அமையலாம், சில நேரம் அவை இழப்பு தரும் விபத்துகளாகவும் அமையலாம்.

பயணம் என்றால் விபத்துகள் இருக்கும். விபத்துளால் இழப்புகள் இருக்கும். அதற்காகப் பயணிக்காமல் இருக்க முடியாது. எவ்வளவு தான் எச்சரிக்கையோடு நாம் பயணித்தாலும், எதிரில் வரும் இன்னொருவரால் விபத்து ஏற்படலாம்.

வாழ்க்கையில் எல்லாவற்றையும் எதிர்கொள்ள முடியம் என்ற நம்பிக்கையுடன் நீ வாழ வேண்டும்.

நம்பிக்கையே வாழ்வின் உதய சூரியன்.

வாழ்வில் வெற்றி பெற உன்னிடமும் நம்பிக்கை இருக்க வேண்டும். உன் மீதும், உன்னோடு இருப்பவர்கள் மீதும் கூட.

உன் நம்பிக்கைக்கு உரியவர்களைச் சரியாக நீ அடையாளம் காண்பதில் உன் உயர்வும், தாழ்வும் இருக்கிறது.

ஒருவரைப் பற்றிய சரியான அறிதலும் புரிதலுமே ஆழமான அன்பையும் நம்பிக்கையையும் நம்மில் வளர்க்கும்.

இங்கே சிக்கலான ஒன்றை நிச்சயம் நான் உனக்குச் சொல்ல வேண்டும். அது, நம்பிக்கைக்குரியவர்களை எப்படிச் சரியாகக் கண்டுகொள்வது என்பது தான். அது, அத்தனை எளிதான காரியமன்று, ஏனென்றால் இவ்வுலகில் நம்பிக் கெட்டவர்களும் உண்டு, நம்பாமல் கெட்டவர்களும் உண்டு.

உன் படிப்பறிவு, பட்டறிவு, பகுத்தறிவு, என அனைத்துமே சில வேளை தோற்றுப் போகும், சரியானவர்களை அடையாளம் காண்பதில். அதனால் உனக்கொரு சரிவு ஏற்படலாம். அதை வீழ்ச்சியாகக் கருதாமல், பாடமாகக் கருதித் தொடர்ந்து செல்ல வேண்டும்.

வெற்றி உன்னிடமிருந்து நழுவும் போது, தோல்வி உன்னைத் தழுவும்போது, விழுந்து விட்டதாக நீ கவலைப்படாதே. எத்தனை முறை விழுந்தாலும் எழுந்து நிற்க வேண்டும். என்பதில் மட்டும் நீ உறுதியாக இருக்க வேண்டும்.

மனத்தில் உள்ளதை வெளிக்காட்டுவதுதான் முகம். ஆனால், மனித முகம் நாடகத் தளமாக மாறிவரும் காலமிது. முகக்குறிப்புகளைப் பார்த்து ஏமாந்து விடாதே. ஒருவரின் முகக்குறிப்பை அறிந்துகொள், அவருடைய உள்ளத்தைப் புரிந்து கொள். உள்ளம் என்பது உணர்வின் பிறப்பிடம் மட்டுமன்று, அது உண்மையின் இருப்பிடம்.

ஆனால், உண்மையும் பொய்யும் உனக்கும் இன்னொருவருக்கும் மாறுபடும் என்பதை மறந்து விடாதே. நீ உண்மை என்று அறிந்திருப்பது இன்னொருவருக்குப் பொய்யாகத் தெரியலாம். ஆகவே தான் சொல்கிறேன். தேவைப்படும் போது தேவையான அளவு மட்டும் பேசக் கற்றுக் கொள்.

உரிய ஆதாரம் இல்லாமல் எதைப்பற்றியும், எவரைப்பற்றியுமான செய்திகளைப் பிறருக்குச் சொல்லாதே.

எனக்கொரு தங்கை இருக்கிறார் வெளிநாட்டில். உனக்கு அவர் பாட்டி முறை. அவர் முகநூலில் எழுதியிருந்த ஒரு அருள் மொழி வாசகம் ஆழமாக என் மனத்தில் பதிந்துள்ளது.

"மனம் திறந்து பேசுங்கள். மனத்தில் உள்ளதையெல்லாம் பேசிவிடாதீர்கள். சிலர் புரிந்து கொள்வார்கள். பலர் பிரிந்து செல்வார்கள்.

என் பாசமகளின் நேசமகளே!

தேவையற்ற விமர்சனங்கள் நட்பையும் உறவையும் கெடுக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள். அதே வேளையில் தேவை என்று அமைகிற போது நீ உண்மையென்று உணர்ந்ததை, அறிந்ததைத் தயங்காமல் உரக்கச் சொல்.

அறிவில் சிறந்து விளங்கும் ஒருவரை கல்வி கேள்வியில் சிறந்தவர் என்பார்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் தெரியுமா? அறிவு வளர்ச்சி என்பது நூல்களைச் கற்று அறிவதால் மட்டும் வருவது அன்று, பிறர் சொல்வதைக் கேட்டு அறிவதாலும் வருவது. அதனால் தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வியின் உயர்வைச் சொன்ன திருவள்ளுவர் செவிச் செல்வத்தின் சிறப்பையும் சொல்லிச் சென்றிருக்கிறார்.

ஒருவர் சொல்வதையெல்லாம் கேட்டு, அவற்றின் படி நடக்க வேண்டுமா, வேண்டாமா, என்பதை முடிவு செய்யும்



உரிமை உனக்கு மட்டுமே உள்ளது. உனக்கு அதற்குரிய வயது வரும் வரை, உன் பெற்றோர் உனக்கு வழிகாட்டலாம். ஆனால், நீ மதிக்கும் ஒருவர், உன்னிடம் அன்பு கொண்ட ஒருவர், உன்னைவிட இளையவரோ, மூத்தவரோ உன்னிடம் பேசும் போது, புரிந்து கொள்ளும் நோக்கில் அவர் சொல்வதை முழுமையாகக் கேட்க வேண்டும். அதுவே, அவரிடம் நீ காட்டும் உண்மையான மரியாதை, இது தான் அடுத்தவர் மானம் போற்றும் பண்பு.

உன் மானத்தை அடுத்தவர் போற்றுவது மட்டுமல்ல தன்மான உணர்வு. அடுத்தவர் மானத்தை நீ போற்றுவது தான் உண்மையான தன்மான உணர்வு.

பிறருக்கு உதவுவதும், பிறர் மானம் போற்றுவதும் மனிதப் பண்புதான் என்றாலும், எல்லோரிடமும் அப்பண்பு இருப்பதில்லை. சிலரிடம் மட்டுமே இருக்கும் அந்தப் பண்பு தான் தலைமைப் பண்பாக, தலைவர்களுக்காக பண்பாக வளர்கிறது.

அறிவாளியாகவும், ஆற்றலுடையவராகவும் தோன்றுகிறவர்கள், தலைவர்களைப் போலத் தோன்றலாம். ஆனால் அவர்கள் தலைவர்களாவதில்லை.

மற்றவர்களை மனித நேயத்தோடு பார்க்கிறவர்கள், மனித சமுதாயத்திற்கு எது சரி என்று சிந்திப்பவர்கள். சமுதாய முன்னேற்றத்திற்கு எது தேவையோ, அதை மட்டும் செய்யத் துடிப்பவர்கள், இவர்கள் தாம் தலைவர்கள் ஆக முடியும்.

மற்றவர்களை மனித நேயத்தோடு பார்க்கிறவர்கள், மனித சமுதாயத்திற்கு எது சரி என்று சிந்திப்பவர்கள், சமுதாய முன்னேற்றத்திற்கு எது தேவையோ, அதை மட்டும் செய்யத் துடிப்பவர்கள், இவர்கள் தாம் தலைவர்கள் ஆக முடியும்.

தம் இருப்பை மக்கள் போற்றும் படி வாழ்பவர்கள் நல்ல தலைவர்கள். தம் இல்லாமையின் வெற்றிடத்தை என்றும் மக்கள் உணரும் படி வாழ்ந்தவர்கள், வாழ்கிறவர்கள் பெருந்தலைவர்கள்.

இன்னும் சொல்வேன்!

உன் அன்புத் தாத்தா


(சிறுகதை)

வித்யாசாகர்

# ஆட்டோ காரனும் அவன் தம்பி ரவியும்

முப்பது நாற்பது வருடங்களுக்குமுன் தள்ளுவண்டியில் ஏறியமர்ந்து ஒரு ரூபா கொடுத்து வீட்டுக்குப் போன அதே பேருந்து நிலையத்தில்தான் இன்று கையில் இரண்டு லட்சம் பணத்தோடு நின்றிருந்தார் இனியவேந்தன்.

'தள்ளுவண்டி ஒரு மேல் கீழ் விகிதாச்சாரத்தை வளர்க்குதே, அதென்ன அவன் மாடு மாதிரி இழுத்துட்டுப்போவான்' நாம சொகுசா உட்கார்ந்து வண்டியில போவது? மனிதமின்னும் செத்துப்போகாது? இப்படி மனுசனுக்குள்ளையே மனுசன் பெரியவன் சின்னவன்னுப் பார்த்தால் அது மனித உறவுச்சங்கிலியை வேகமாய் அறுத்துவிடுமே, பிறகு சுயநலம்



மட்டும்தான் பெருசா தெரியுமென்பார் இனியவேந்தன்.

"அப்படிப் பார்த்தா அப்புறம் அவன் குடும்பம் எப்படி சார் ஓடும்? அவன் பிழைக்கவேண்டாமா?" என்று கேட்டால், "அச்சச்சோ அதுவேற இருக்கா, சரி வா அப்போ அதுலையே போலாமென்பார். ஆனாலும் அந்த தள்ளுவண்டிக் காரரர் இழுத்துக்கொண்டுபோய் வீட்டருகே அவரை விட்டதும், இறங்கி வியர்வைசொட்டும் அந்த வயதான மனிதரைப் பார்க்கையில், ச்ச இதுக்கு நாமலே நடந்துவந்திருக்கலாம்' இதென்ன நமக்கு பணமிருக்கேன்ற மேதாவித் தனம்தானே என்று மீண்டும் வருந்துவார்.

இனியவேந்தனுக்கு ஒரு ஐம்பத்தைந்தைத் தாண்டி வயதிருக்கும். தள்ளாடமாட்டார். தடுமாற மாட்டார். நிதானமாக பேசுபவர். பத்து காசுன்னா கூட தனக்காக செலவு செய்ய அஞ்சுவார். நடுத்தரத்தைக் கூட எட்டாத ஒரு விளிம்புநிலை மனிதர். சமூகம் நாடு அது இதுன்னு பெரிய அக்கறையெல்லாம் அவருக்கில்லை. அன்றைய ஒருநாள் பொழுது வீட்டில் அரிசி இல்லையென்று பேச்சில்லாமல்போனால் அவருக்கது பெரிது. அவரை பொறுத்தவரை தான் சரியா இருக்கணும். தான் சரியாயிருந்தா எல்லாம் சரியாகும். தன்னை முதல்ல சரி செய். தன்னை யார்னு புரிந்திரு. தனது பலம் என்னன்னு தனக்கு தெரிந்திருந்தால்தான் பிறருக்கு மத்தியில் நான் யார், என்னால் வேறென்ன செய்ய இயலும், எப்படி நடந்துக்கொள்ள முடியும், எதுவரை என்னால் எட்டித்தொட முடியுமென்றெல்லாம் ஒரு வரம்பு வைத்துக்கொள்ள சாத்தியப்படுமென்றுச் சிந்திப்பவர்.

அதுபோல் தனது தவறுகளையும், ஆசைபடும் மனசையும்கூட அறிந்திருக்க வேண்டுமென்பார் அப்போதுதான் அந்தந்த இடம் பொருத்து தன்னை எடைபோட்டுக்கொள்ள முடியும், நான் எவ்வளவு கீழானவன் என்பதையறிந்துக்கொள்ள முடியுமென்பார். இது தவறுன்னா அதை ஏன் நான் செய்யுறேன், அப்போ தவறு செய்யாம எப்படி வாழறது, தன்னாலேயே முடியாதபட்சத்தில் பிறரை எப்படி நான் நல்லவராக எதிர்ப்பார்க்க இயலும்' என நல்லதும் கெட்டதுமாய் தன்னை அலசிப் பார்த்துக்கறது தான் அவருக்கு முக்கியம். யார் எப்படியோ அவரவருக்குப் புரிந்த வாழ்க்கையை அவரவர் வாழ்ந்துட்டுபோகட்டும். எனக்கு நான் சரியா வாழ்ந்தேன்னா அது போதுமிந்த பிறப்புக்கு என்பார்.

எப்படியோ தள்ளுவண்டி, மாட்டுவண்டி, குதிரைவண்டின்னு எல்லாம் மாறி, சைக்கிள் ரிக்ஷா மாறி, ஆட்டோ' சேர்ஆட்டோ' மேஜிக் ஆட்டோன்னு' சென்னை தனது ஆடையை வெவ்வேறு பரிமாணங்களில் வேறுவேறாக உருவி உருவி தூர எறிந்துவிட்டு வேறு வேறான பல வண்ணஆடைகளோடு மாறிக் கொண்டிருக்க, தனது முப்பத்தைந்து வருட உழைப்பை கணக்குத் தீர்த்து ஒரு சிறிய நிறுவனம் தந்த ரெண்டு லட்சத்தை வாங்கி ஒரு பாலிதீன் கவருக்குள் சுற்றிவைத்துக்கொண்டு எப்போதும் நிற்கும் அதே பேருந்து நிலையத்தில் வந்துநின்றார்.

கணக்கெல்லாம் பார்த்து வெளிய வரவே மணி எட்டாயிப்போச்சு, ஆபிஸ் மூடி வெளியே வந்தா பஸ் ஸ்டாப். பற்றவாக்கம் போனோம் பஸ் வரும்னு காத்துநின்னா வேலையாகாது, கூட்டம் தள்ளிகிட்டு வரும். அதும் பகலெல்லாம் ஆபிஸ்ல உழைக்கிறது, தெருவில் நின்னு மண்ணு அல்லுறதுகூட பெரிய கஷ்டமில்லை, அந்த எல்லோரையும் மொத்தமா போட்டு ஒரு பெட்டிக்குள்ள அடச்சி இடிச்சு நெருக்கி குலுக்கி குலுக்கி ஊருக்குள்ளக் கொண்டுபோய் சேர்ப்புதற்குள்ள பாதி சீவன் போய்டும். இன்னைக்குன்னு பார்த்து கையில் இவ்வளோ பெரிய பணம் வேற இருக்கு.

வேலைக்குபோய் முதல்ல வருமானம்னு அவருக்கு கிடைத்தது வெறும் பத்து ரூபா தான். பிறகந்த பத்துருபா முப்பது ரூவா ஆயி, பின்ன அது எழுபத்தஞ்சி இருநூறு ஆயிரம் இரண்டாயிரம் மூனாயிரம்னு ஏறி ஏறி என் வயதை இளமையை மிதித்துக்கொண்டு எனது திறமையை உழைப்பையெல்லாம் காசாக்கிக்கொண்டு என் வீட்டுக்கு சோறுபோட்ட ஒரு முப்பத்தைந்து வருடத்து உழைப்புக்கு, நான் இதுவரை சுமந்த பாரத்திற்கு ஏதோ அவர்களால் கொடுக்கமுடிந்த ஒரு சன்மானம் இந்த இரண்டு லட்சம் தான்..

இனி இதை வைத்துத்தான் என் சின்னப்பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும், இதை வைத்துத்தான் சின்னவனை எதுளையாவது சேர்த்துவிட்டு ஒரு மதிக்கத்தக்க ஆலாக்கணும், இதை வைத்து முதலில் என் தங்கச்சி குழந்தைங்க அம்மா பொண்டாட்டி என் தம்பி குடும்பம் என் பிள்ளைங்க எல்லோருக்கும் ஒரு ஒத்தத் துணியையாவது சந்தோசமா எடுத்து தரனும். முதல் வேலையா என் மனைவியை கூட்டிபோய் ஒரு நல்ல ஒட்டல்ல சாப்பாடு வாங்கித் தரனும். எவ்வளவு உழைப்பு அவளுக்கு.., இந்த பணம் அசலாப் பார்த்தா அவளுக்குச் சொந்தம். அவளும் எனக்கீடா அந்தளவிற்கு உழைச்சிருக்கா. இத்தனை வருஷம் ஒரு வார்த்தைக்கு மூச்சு விடாம எனக்காக வாழ்ந்திருக்கா அவளுக்கு கணக்கு பார்த்தா இந்த பத்துலட்சம் ஒன்னுமேயில்லை..

“சார் எங்க சார் போனோம்..”

“பற்றவாக்கம்..”

“இல்ல போவாது..”

அவன் விர்ரென்று போனான். இனியவேந்தன் ஏதேதோ யோசித்துக்கொண்டே நின்றிருந்தார். நேரம் கடந்துக்கொண்டே இருந்தது. இருட்டும்வேளையில் சென்னைப் பேருந்து நிலையைத்தில் நிற்பது ஒரு பயம் சூழ்ந்த மனநிலை. எப்போ வண்டி வரும், எப்போ போவோம், போய் குளிக்கணும், சாப்பிடனும், பிள்ளைங்க என்ன பன்னுச்சோ, மனைவி காத்திருப்பா., இப்படி அது இதுன்னு மனசு பேருந்தை நோக்கி அலைந்துக் கொண்டேயிருக்கும்.

“மணி வேற ஒன்பதாயிடுச்சி, வர பஸ்செல்லாம் ஃபுல்லா வறானே.. வேற வழியில்ல ஆட்டோ தான் புடிக்கனும்..” மனதில் நினைத்துக்கொண்டார்.

“ஏன்பா ஆட்டோ..”

“எங்க சார் போனோம்..?”

“பற்றவாக்கம்”

“முன்னூறு ஆவும் சார்”

“இன்னாப்பா தோ இருக்குற பற்றவாக்கத்துக்கு ...”

“தோ..ன்னா; பெட்ரோல் போட்டு போவவேண்டாமா சார்? 75ரூபா விக்கிது எண்ணெய், முன்னூறே கம்மி சார்..”

“இல்லப்பா நீ போ, நான் வேற பார்த்துக்குறேன்”

“பாரு பாரு உனக்கு பற்றவக்கதுக்கு போறதுக்கு பிளைட் வந்து தூக்கினு போவும்” அவன் முனங்கிக்கொண்டே போனான். மனிதர்கள் வேறு வேறானவர்கள். கொடுக்கவில்லை என்றால் விட்டுப் போவதை கடந்து திட்டிப்போகுமளவு இழிவாகி விட்டது, நமது சமுதாயம். அவரவருக்கு அவரவர் தேவை மட்டுமே பெரிதாக இருந்தது.

“சார் பிச்சை போடு சார்..” பெண் குரல் கேட்டு திடுக்கிட்டார். காலையிலருந்து நிக்கிறேன் சார்., பசி உயிர் போவுது சார்ஞ்.

“போமா அங்கிட்டு, கூன் போட்டு நடக்க முடியாத கிழவி தெருவுல தயிர் கூடைய சுமக்குறா, கீற விக்கிறா, உனக்கென்னமா கல்லு மாதிரி இருக்கியே’ போய் வேலைய எதனா செய்யறதுதானே?”

"நீ வேலை குடு சார் செய்றேன்"

"தேடு.., நாலு இடம் சுத்தி அலை, இருபது ரூவா பிச்சை எடுக்கறதுக்கு பத்துரூபா சம்பாதுச்சி மானத்தோட ஒரு சொம்பு காஞ்சி குடி. நாளைக்கு உன் பிள்ளை குட்டி பெருசா வளர்ந்து அதுங்க தலைமுறையில அதுங்க ஜெயிக்குமுல்ல, ஏன் இப்படி அது முகத்தை காட்டி நீ பாவத்தை சுமக்குற..?"

அக்கம் பக்கம் சற்று முகம் சுழித்தார்கள், ஒரு சிலர் சரி என்றார்கள். அந்தப் பெண் அங்கிருந்து நகர்ந்து இன்னொருவரிடம் கைநீட்டினாள். இனியவேந்தனுக்கு மனசு வலித்தது. யார் தூக்கி சுமக்கிறது இந்த உலகத்தை(?) யார் வந்து திருத்துறது? பெரிய சாமியா நேர்ல வந்து தோ இங்க போ அங்க பொண்ணு சொல்லும்? நாமதான் மாத்திக்கணும். நாள்பட நாள்பட ஒருத்தர் சொல்லி ஒருத்தர் தோள் தந்து தன்னை சரி செய்துக்கணும். தான் திருந்துனா இந்த உலகம் தானே மாறிட்டுபோது.. ச்ச யார் வந்து இதலாம் சொல்றது.." மனதில் சலித்துக்கொண்டார்.

நிறைய பேருந்துகள் கூட்டம் கூட்டமாக வந்தது. பக்கத்தில் வேர்கடலை அவிக்கும் வாசனை, தள்ளு வண்டியில் நின்று ஒருவர் வேர்கடலை மாங்கா வெள்ளேரிக்கா விற்றுக்கொண்டிருந்தார். தெருவோரக் கடைகள் அசதியை விரட்டி விளக்கினை ஏற்றிவைத்துக்கொண்டிருந்தது. வேகமாக வரும் போகும் பேருந்துகள் மரநிழலுள் அண்டும் இருட்டையெடுத்து பின்னே வீசிவிட்டு முன்னெப் போகும் வெளிச்சத்தோடு சர் சர்ரென



போய்க்கொண்டும் வந்துக்கொண்டுமாய் இருந்தது. கையில் வேறு பை நிறைய பணம். இன்னொரு ஆட்டோவை நிறுத்தினார் இனியவேந்தன்.

"ஐநூறு ஆவும் சார்.."

"எங்க தோ இருக்க பஞ்."

அவன் நிற்கவே இல்லை, பேசிமுடிப்பதற்குள் சர்ரென வண்டியை முறுக்கிக்கொண்டு போனான். 'என்னடா ஆளுங்க இவனுங்க, ஒருத்தன் முன்னூறுன்னா, இவன் ஐநூறுன்றான்,

இவனுங்களுக்கு ஒரு அளவே கிடையாதா? ச்ச.. யாருக்கு இருக்கு அளவு; எவன்னா செத்து எக்கேடோ கெட்டுப்போகட்டும் எனக்கு வயிறு ரொம்பினா போதும்ற சமூகம் இனி எங்க போய் தன்னை செதுக்கிக்கப் போகுது..(?)

"எங்கணா பற்றவாக்கமா போறீங்க?" பக்கத்தில் ரொம்ப நேரம் நின்று இனியவேந்தனை பார்த்துக்கொண்டிருந்தவர் தானே முன்வந்து கேட்டார்.

"ஆமா தம்பி, ஒருத்தன் போகமாட்டென்றானே..?"

"எவ்வளோ சொல்றான்"

"எங்க ஒருத்தன் முன்னூறுன்றான் இன்னொருத்தனுக்கு ஐநூறு வேணுமாம்"

"ஆமாணே இருட்டி போச்சில்ல, அப்படித்தான் கேப்பாங்க.., முதல்ல அந்தப்பக்கம் யாரும் வரமாட்டாய்ங்களேணே(?) வேணும்னா ஒன்னு பண்ணுவோம், நானும் அங்கதான் போறேன், ரெண்டுபேரும் பாதி பாதி போட்டு போவோமா?"

"ம்ம்.. போய்க்குனா போது.., ஆனா இந்த பாதி பணம் கொறையைறது இல்லக் கண்ணு பாதை, ஐநூறு கேக்குறான் பார்;

"அதலாம் பார்த்தா கதைக்காவுமா, எங்கணா வேலை செய்யுற?"

"தோ இங்க தான்; கொஞ்சம் தள்ளி ஒரு பேப்பர் மில்லுல, பொழுதோட வந்தா பஸ்சுல போய்டுவேன், இன்னிக்கு கொஞ்சம் நேரம் தாழ்ந்து போச்சு கண்ணு.."

"எங்க சார் போனோம் ? ஆட்டோ வேணுமா?"

"பற்றவாக்கம்ப்பா ராஜா, எவ்வளோ கேப்ப?"

"முன்னூறு குடு"

"நூருரூபா தானேய்யா.. முன்னூறு கேக்குறியே.."

"பொழுது போச்சிண்ணா, இந்த இருட்டுல எவன் வருவான் திரும்ப, காலியா ஓட்டிவரனும் திரும்பி வரப்ப, இல்லைனா சேர் ஆட்டோ புடிச்சி போ.. பத்துரூபாய்க்கு வருவான்.." அவன் சொல்லிக்கொண்டே சர்ரென நகர்ந்துப்போய் விட்டான்..

"அடப்பாவிங்களா.., முன்னூறுக்கு போய் இருக்கலாம், இப்படி போயிட்டானே.." அவரும் புலம்பியவாறே சற்று தள்ளி நின்ற மற்றொரு ஆட்டோவிடம் சென்று நிற்க, அதற்குமுன் அந்த கூடநின்ற ஆள் ஓடிப்போய் கேட்டார்

"ஆட்டோ பற்றவாக்கம் போகுமா ?"

"போவும்.."

"யண்ணா வாண்ணா.." ஆட்டோவில் ஏறியவாறே கூவினான் அவன்.

"எவ்வளோ ப்பா" ஏறிக்கொண்டே கேட்டார் இனியவேந்தன்.

"முந்நூத்தம்பது கொடு"

"இவ்வளோ..."

"நான் நிறைய எல்லாம் கேட்கலை சார், பொழுது போச்சு, வரும்போது சவாரி கிடைக்காது, வண்டி காலியாதான் வரும், சரி உனக்கு வேணாம் எனக்கும் வேணாம் முன்னூறு கொடு.."

சரியென இருவரும் ஏறிக்கொண்டார்கள். ர்ர்ர்ரென காதுக்குள் குடைவதுபோல ஆட்டோ உறும்பும் சத்தம் மண்டைக்குள்வரை பதிவாகிக்கொள்ளும். ஆட்டோ காரர்கள் தனியாக அவர்களுக்கென்றொரு எழுதாச் சட்டம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று ஒரு லட்சியம் இருக்கிறது. இவ்வளோ சேர்ஆட்டோ வந்திருக்கு மேஜிக் அட்டோன்னு பத்து பத்தா அல்றான் நீங்க அப்படி போகக் கூடாதா என்றால், போகக் கூடாது என்கிறார்கள் ஆட்டோ காரர்கள்.

அவர்களுக்கு இது தான் தொழில்.

ஆட்டோ மட்டும் தான் சாமி. அதை விட்டு அத்தனை எளிதில் அவர்களால் வெளியே வந்து விட முடிவதில்லை. என்ன தான் ஒரு நூருபா கேட்டு அழிச்சாட்டியம் பண்ணாலும், வயசானவங்களுக்கு புள்ளையாவும், புருஷன் கூடவராத அக்காங்களுக்குத் தம்பியாவும், தனியே போகும் பெண்களுக்கு அப்பாவாவும் ஒரு துணையாக வந்துப்போறது இந்த ஆட்டோகாரர்கள் தான்.

இனிய வேந்தன் ஏறி உள்ளே அமர்ந்து அந்தப் பையை பத்திரமாகப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையில் ஒரு கம்பியைப் பிடித்துக் கொண்டு ஆட்டோவின் பக்கவாட்டுக் கண்ணாடியில் தெரியும் அட்டோகாரனின் முகத்தைப் பார்த்தார். அத்தனை உழைப்பு, அசதி, தீரா கவலையென முகம் சோகம் நிரம்பி கிடந்தது.

"எங்க தம்பி வீடு.. ?"

"இங்கதாண்ணா பக்கத்து தெரு"

"ஓ இந்த ஏரியா மட்டும் தான் ஓட்டுவீங்களா?"

"அப்படிலாம் இல்லங்ணா, இந்த மூளை அந்த மூளை எங்க போனோம்னாலும் போவ வேண்டியது தான் நம்ம வேலை"

"பற்றவாக்கம்னா பயப்படுறாங்களே ஏன்?"

"அது டொக்குண்ணா அது, போனா வந்தா வேற சவாரி கெடைக்காது. ஏறி இறங்கி மனுஷன் சாவனும். ஏதோ பெரியவங்களாச்சேன்னுதான் நானே சரின்னு ஏத்திக்குனேன், இல்லைனா நான்கூட அங்கே போகமாட்டேன்"

"சும்மாவா ஏத்துன, நூறு ரூபாய்க்கு முன்னூறு வாங்கறல்ல, பக்கத்துல இருந்தவர் பேசினார்"

"நீ வேற.. போ.., அவ்வளோ சுலுவா சொல்ட்ட, எங்க பொழப்பு வோடறதே எவ்வளோ பெரிய பாடுன்னு எங்களுக்கு தான் தெரியும். எங்க பார்த்தாலும் சேர்ஆட்டோ மேஜிக்ஆட்டோ மினிபஸ்சுன்னு போது, நடுவுல நாலு காசு பார்க்குறதே நாய்ப்பட்ட பொழப்பு. ஏதோ உங்களை மாதிரி அட்டோவுக்குன்னு வரவங்க வந்தா தான் எங்களுக்கு வருமானம்"

"ஆயிரபா சம்பாதிப்பீங்களா தம்பி?"

"ம்ம் வரும் சார்.. பெட்ரோல் வெலை? அதுக்கு இதுக்குன்னு தானிக்கு தீனி தான் எல்லாம்.."

"கல்யாணம் ஆயிடுச்சா?"

"ம்ம் ரெண்டு புள்ளைங்க பள்ளிக்கொடம் போவுது"

"அப்பாம்மல்லாம்.?"

"இருக்காங்க சார், ஒரு அண்ணன், அப்பாம்மா, தம்பி எல்லா இருக்காங்க. நாந்தான் அல்லாத்தையும் பார்த்து பார்த்து போய் சேர்ந்துடுவன்போல"

"சொந்தங்களை நாமதானேப்பா பார்க்கணும்? நம்ம அண்ணன் தம்பியை நம்ம அப்பாம்மாவ வேற யார் பார்ப்பா?"

"பதினெட்டு வருஷமா ஆட்டோ ஓட்டுறேன் சார், சம்பாரிச்சேன் இல்லன்னு சொல்லல, ரெண்டு இடத்துல இங்க அங்கன்னு மண்ணு வாங்கனேன், ஆனா பிரயோசனம் இல்லையே"

"யான் என்னாச்சு?"

"என் தம்பி சாவ கெடக்குறான் சார்"

"சாவவா..... ஏன் ?"

"தோ சுகர்னாங்க, பிளட் பிரசராம், நாய் குடிச்சு குடிச்சு உடம்பை கெடுதுக்குனு, இப்போ ரெண்டு கிட்னியும் போச்சு"

"..............."

தொடரும்...

# தோற்றமும் ஆற்றலும்



ஒரு பெரிய தேரின் அச்சாணி மிகச்சிறியது. இருப்பினும் அந்தத் தேர் சீராக ஓடுவதற்கு அது இன்றியமையாததாகின்றது. அதுபோல ஒருவர் தோற்றத்திலே சிறியவராக இருதாலும் அவர் செய்யக்கூடிய செயல் பெரியதாக இருக்கக்கூடும். அதனால், தோற்றத்தைக் கண்டு, அவர் தோற்றத்தில் சிறியவராக இருக்கிறாரேயென்று எள்ளி நகையாடுதல் நன்றன்று என்கிறார் வள்ளுவர்.

உருவுகண் டெள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து
குறள் 667

அமிதாப் பச்சன் என்ற இந்தித் திரைப்பட நடிகரை உலகம் நன்கறியும். அவர் ஒருமுறை விமானத்திலே பயணம்செய்தார். அவருக்குப் பக்கத்து ஆசனத்தில் ஒரு நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்போல எளிமையாக ஒருவர் இருந்தார். அவர் தன்பாட்டில் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார். பேச்சுக் கொடுப்பதற்காக அமிதாப் அவர் பக்கம் திரும்பினார். “உங்களுக்கு என்னைத் தெரிகிறதா?” என்று கேட்டார்.

அவரோ, "மன்னிக்கவேண்டும். நீங்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை" என்றார்.

"நீங்கள் திரைப்படங்கள் பார்ப்பதுண்டா?" இது அமிதாப்பின் அடுத்த கேள்வி.

"சில படங்கள் பார்த்திருக்கிறேன்" என்றார் அந்த மனிதர்.

அமிதாப்புக்கு ஒரே ஆச்சரியம். உலகமே என்னை அறியும். இவர் என்னைத் தெரியாது என்கிறாரே என்று யோசித்தார். பின்னர் அவரை நோக்கி, "நான் அமிதாப் பச்சன். உலகப் புகழ்பெற்ற இந்தித் திரைப்பட நடிகர்" என்றார்.

"ஓ! அப்படியா?" என்றுவிட்டு எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் அந்த மனிதர் தொடர்ந்து தன்வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

என்னைப் பார்க்க எத்தனைபேர் வரிசையில் நிற்பார்கள், முண்டியடித்துக்கொண்டு வருவார்கள். ஆனால் நான் இவ்வளவு அண்மையில் இருந்தும் இவரென்ன ஒரு சிறிதளவும் ஆர்வம் காட்டுவதாக இல்லையே என்று அதிசயித்தார் அமிதாப். விமானத்தை விட்டு இறங்கும்போது, "நீங்கள் யார்?" என்று அந்த மனிதரைக் கேட்டார் அமிதாப். "நான் டாட்டா நிறுவனத்தின் உரிமையாளர்" என்று பதில் வந்தது. அமிதாப் அதிர்ச்சியில் இருந்து மீளமுன் அந்த நபர் போய்விட்டார். ஒரு மிகப் பெரிய நிறுவன உரிமையாளர் எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி அமைதியாக அமர்ந்திருந்தார் என்பது ஆச்சரியந்தானே? அவரின் தோற்றத்தைப் பார்த்து தவறாக எடைபோட்டுவிட்டார் அமிதாப்.

பாண்டிய மன்னன் சமணத்திலே தோய்ந்து சைவத்தைப் புறக்கணித்துவந்தான். பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் இதனாற் கவலைகொண்டார்கள். எப்படி இந்தக் குறையைச் சரிசெய்யலாம் என்று ஆலோசித்தபோது திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். அவரைப் பாண்டிநாட்டுக்கு வரும்படி அழைத்தார்கள். அவரும் சம்மதித்து வந்தார். அவரைப் பார்த்ததும் மங்கையர்க்கரசியார் தடுமாறிவிட்டார். இவ்வளவு சிறிய பாலகனைச் சமணர்கள் துன்புறுத்துவார்களே என்று பச்சாத்தாபப்பட்டார். ஆனால் ஞானசம்பந்தரோ இறையருளை நம்பியிருந்ததனால் எவ்வித பயமுமின்றி இருந்தார். அதை மங்கையர்க்கரசியார் உணரும்படி ஒரு பதிகமாகப் பாடியருளினார்.

பாண்டிய மன்னனின் மாதரசியே, மானின் மருண்ட விழிகள்போலக் கண்களை உடையவளே, பால்வடியும் வாயையை உடைய ஒரு சிறுபாலகன் நான் என்று நீ பரிதாபம் கொள்ளாதே. ஆனைமலை போன்ற இடங்களில் இருந்து வந்து துன்பம் கொடுக்கின்ற சமணர்களுக்கு நான் எவ்விதத்திலும் சளைத்தவன் அல்லன். ஏனெனில் திரு ஆலவாயில் உறையும் இறைவன் எனக்குத் துணையாக இருக்கும்போது எனக்கு எவ்விதத் துன்பமும் விளையாது.

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்

பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்

ஆனைமாமலை ஆதியாயவி டங்களிற்பல அல்லல்சேர்

ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயர னிற்கவே


*திருமுறை 3 பதிகம் 39 பாடல் 1*

# ஆன்மிகவாதிகளுக்கு


## அரிய சந்தர்ப்பம்

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?

### திருவிழா – சுற்றுலா



மார்கழி மாதம் 6ஆம் திகதி புறப்பட்டு மார்கழி 16ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - திருவண்ணாமலையும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

தானும் அறவழியில் நடந்து,
பிறரையும் அவ்வழியில்
நடக்கச் செய்திடுவோரின் இல்வாழ்க்கை,
துறவிகள் கடைப்பிடிக்கும்
நோன்பைவிடப் பெருமையுடையதாகும்.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

பழிப்புக்கு இடமில்லாத
இல்வாழ்க்கை இல்லறம்
எனப் போற்றப்படும்.





இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை. 2 பவுண்ட் மட்டும்**



Happy Akshaya Tritiya

லூசியத்தில் தரமான நகைக்கடை

தினேஷ்

ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்

Thinesh

Jewellers & Textiles

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM




உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10



Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


ஆடை
ஆபரணம் வாங்க
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய
ஒரே இடம்
Jk Gold House &
Fashion House
314 - 316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677


எவரெஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


Anthoorium
World of Designs
Jewellery
&
Textiles
102, B Burlington Road
New Malden
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk




# செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

## SELVARAJA GOLD HOUSE & TEXTILES

**£ 300க்கு மேல்**
**நகை வாங்குவோருக்கு**
**லட்சுமி தங்கக் காசு**
**இலவசம்**

- உங்களிடம் இருக்கும் பழைய தங்கத்திற்கு அதிகூடிய விலையில் உடன் பணம்.
- சொற்ப கூலியை மட்டுமே செலுத்தி புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
- எங்களிடம் தாலிக்கொடி செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள், பட்டுப் புடவைகள் 50% விலைக்கழிவில்.
- புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகுங்கள்.

162 B Mitcham Road London SW17 9NJ

Tel : 208 767 3795 **Mobile : 078 25005269**



Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி
SRI STORE
இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக
396-400 Ilford Lane
Town Centre Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737




SUN
MOTORS
Mechanical / Body Repairs /
Recovery / Tyres
Tel : 02086920232
R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW




லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும்
தமிழர் உணவு வகைகள்
லீலா
தயாரிப்புகள்
உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்
புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும்
தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.
லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்
Vaani Foods
தொலைபேசி இலக்கம்
0208 668 7648


SURYAA
CURRY LEAVES
CINNAMON
4 TYPES OF CHILLIES
PEPPER
CUMIN
TURMERIC
FENUGREEK
FENNEL
FENNEL
CLOVE
RAMPE
CORIANDER
BEST SELLER
100% NATURAL
4 CHILLIES BLEND
The Right Choice
SURYAA
ROASTED CURRY POWDER
MILD
HOT
EXTRA HOT
500g
900g
3 Kg


உங்கள் திருமணத்தின் ஏழு வைபவங்களையும்
ஆரெம்கேவியின் "பிரைடல் சில்க்ஸ் ஆப் இந்தியா"
பட்டோடு கொண்டாடுங்கள்
93 years of silk heritage
RmKV
Wedding Silks
Bridal Seven
நிச்சயதார்த்தம்
மெஹந்தி
ஊஞ்சல்
முகூர்த்தம்
நலுங்கு
ரிசப்ஷன்
கிருஹப்பிரவேசம்
• சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
• கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு
• திருநெல்வேலி: வண்ணார்பேட்டை | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண் • பெங்களூரு - ஓரையன் மால்.
toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks

# கணேஷா தமிழ் கடை


## Ganesha Asian Supermarket

433 Bromley Road Downham BRI 4PH

020 8698 0990


Lewisham, Catford
Downham, Bromley
வாழ் மக்களுக்கு
ஒரு
புதிய உதயம்

- இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறிகள் பழங்கள்
- உடன் மீன் இறைச்சி வகைகள்
- குடிபானங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- பூஜைப் பொருட்கள்



**அனைத்தையும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்**

விசேட விலைச்சலுகையில் ஏராளமான பொருட்கள்
இன்றே விரையுங்கள்


லண்டனில்
No1
நகை
மாளிகை
Lakshamis Jewellers
Happy Akshaya Tritiya
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை